# நிதித்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2022 - 2023

## மானியக் கோரிக்கை எண். 16


## முனைவர் பழனிவேல் தியாக ராஜன்

நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2022

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முகவுரை | 1 |
| 2 | தணிக்கைத் துறைகள் | |
| | i. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை | 35 |
| | ii. கூட்டுறவுத் தணிக்கைத் துறை | 58 |
| | iii. மாநில அரசுத் தணிக்கைத் துறை | 66 |
| | iv. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை | 73 |
| | v. இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை | 82 |
| 3 | நிருவாகத் துறைகள் | |
| | i. கருவூலக் கணக்குத் துறை | 85 |
| | ii. சிறு சேமிப்புத் துறை | 103 |
| 4 | இதர முகமைகள் | |
| | i. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் | 107 |
| | ii. தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம்(TNIFMC) | 114 |
| | இணைப்புகள் | |

# கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண்.16

## நிதித் துறை

## 2022-2023-ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு

**முகவுரை:**

**“பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்**
**அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து”**

(குறள் 738)

மக்களுக்கு நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி, பொருளாதார வளம், இன்ப நிலை, உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டுக்கு அழகு.

2. தமிழக அரசின் பொது நிதியை செம்மையான முறையில் நிருவகிக்கும் பொறுப்பு நிதித்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

**நிதித்துறையின் முக்கிய செயல்பாடுகள்:**

i. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 202-இன்படி சட்டமன்றப் பேரவையின்

முன் வைப்பதற்கு அரசின் வரவினங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

ii. மாநிலத்தின் கருவூலக் காப்பாளர் என்ற முறையில் தமிழக அரசின் பொது நிதியை மேலாண்மை செய்தல்.

iii. மாநில அரசின் நிதி நிலை மேலாண்மை தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் தேவை ஏற்படும் போது அவற்றை மறுஆய்வு செய்தல்.

iv. அரசின் நிதி நிலை இலக்குகளை கருத்திற்கொண்டும், துறைவாரியான நிதித் தேவை, செலவுக்கேற்ற பயன், ஆகியவற்றின் அடிப்படையில் வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கம் மற்றும் நிதி நடைமுறைகளுக்குட்பட்டு பல்வேறு கருத்துருக்களைக் கூர்ந்தாய்வு செய்து மதிப்பீடு செய்தல்.

v. வரவுகளையும், அதற்கேற்றவாறு செலவுகளையும் சீராகப் பராமரிக்கும் பொறுப்புடன், கடன் பொறுப்புகளையும் அரசின் வரவுக்கேற்றவாறு பொருத்தமான செலவினங்களை மேற்கொள்வதும், பெறப்பட்ட கடன்களை உரிய காலத்தில் திரும்பச்செலுத்துவதை உறுதிசெய்வதும் இத்துறையின் பொறுப்பாகும்.

vi. இத்துறையானது, மாநிலத்தின் ஒட்டுமொத்த கடன் தேவையை நிருவகிப்பது மற்றும் கடன் மூலம் பெற்ற நிதியை திறம்பட பயன்படுத்தப்படுவதையும் உறுதி செய்கிறது.

**தொலை நோக்குத் திட்டம்:**

3. துறைகளுக்கும் திட்டங்களுக்கும் முன்னுரிமை அளித்து, திறன்மிக்க நிதிமேலாண்மையுடன், மாநிலத்தின் நிதிநிலையின் வளத்தைப் பேணி பாதுகாத்து முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய துறைகளையும் முன்னெடுப்புகளையும் செயல்படுத்துவதே

நிதித்துறையின் தொலைநோக்குத் திட்டமாகும். நிதித்துறையில் பெருகி வரும் சவால்களைச் சமாளிப்பதற்கு, தொழில்நுட்பத் திறன்களுடன் கூடிய நவீன நடைமுறைகளை இத்துறை கடைப்பிடிக்கிறது. ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின் பேரியல் கூறுகளான மொத்த வரவுகள் மற்றும் செலவினங்களை நிதித்துறை நிருவகிக்கிறது.

4. இந்தக் கட்டமைப்பிற்குள், செலவினத்திற்கான முடிவுகள் குறித்து, அதிக தன்னதிகாரம் வழங்குவதுடன் அதற்கான பொறுப்பினையும் கணிசமாக உயர்த்துவதை இத்துறை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், இத்துறையானது அரசின் நிதியை திறம்பட பயன்படுத்துவதை உறுதிசெய்வதுடன், தணிக்கை முறையை மிகவும் வலுவானதாகவும் செயல்திறன்மிக்கதாகவும் மாற்றுகிறது. இந்த நோக்கங்களை அடைய பல்வேறு முன்னெடுப்புகள் மற்றும் இடையீடுகள் செயல்படுத்தப்படும்:

- ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் மற்றும் கருவூல அமைப்பினை வலுப்படுத்துதல்.

- ஏனைய துறைகளுக்கும் முகமைகளுக்குமான நிதிப்பாய்வினைக் கண்காணித்தல்.

- தணிக்கை முறைகளை வலுப்படுத்துதல்.

- நவீன வரவு செலவுத் திட்ட செயல்முறைகளை ஏற்றுக்கொள்ளுதல்.

- பொறுப்புடைமை மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.

- கொள்முதல் செயல்முறையின் செயல்திறனை மேம்படுத்துதல்.

## புதிய முயற்சிகள்

5. மாநிலத்தின் சிறந்த நிதி நிருவாகத்திற்காக இத்துறை பின்வரும் முன்முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

## (i) பொருளாதார வல்லுநர் குழு

6. உலகின் தலைசிறந்த பொருளாதார வல்லுநர்களான பேராசிரியர்.எஸ்தர் டப்லோ, பேராசிரியர்.ரகுராம் ராஜன், டாக்டர்.அரவிந்த் சுப்ரமணியன், பேராசிரியர். ஜீன் திரேஸ், மற்றும் டாக்டர். எஸ்.நாராயண்,இ.ஆ.ப.,(ஓய்வு) ஆகியோர்களைக் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனை குழுவினை அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் ஆலோசனைகளைக் கொண்டு புதியத் திட்டங்கள் மற்றும் மேம்பட்ட சேவை வழங்கல் மூலம் விரைவான பொருளாதார, சமூக நீதி மற்றும் சமத்துவத்தை உறுதி செய்வது அரசின் நோக்கமாகும்.

இக்குழுவின் வரையறை நியதிகள் (Terms of Reference) பின்வருமாறு:-

i. பொருளாதாரம் மற்றும் சமூகக் கொள்கை, சமூக நீதி மற்றும் மனித மேம்பாடு தொடர்பான பிரச்சனைகள், குறிப்பாக பெண்களுக்கு சம வாய்ப்புகளை உறுதி செய்வது மற்றும்

நலிவடைந்த பிரிவினரின் நல்வாழ்வு தொடர்பான பொதுவான வழிகாட்டுதல்களை வழங்குதல்.

ii. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குதல்.

iii. மாநிலத்தின் ஒட்டுமொத்த நிதி நிலையை மேம்படுத்துவதற்கான வழிகாட்டுதலை வழங்குதல்.

iv. மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்க மாநிலத்தின் திறனை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை வழங்குதல்.

v. புதிய யோசனைகள் அல்லது நீண்டகால சிக்கல்களுக்கான சாத்தியமான தீர்வுகளுக்கான குரலாக செயல்படுதல்.

vi. மாண்புமிகு முதலமைச்சர் அல்லது மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சரால் குழு அல்லது அதன் உறுப்பினர்களுக்குப் பரிந்துரைக்கப்படும் எந்தவொரு பொருளாதார மற்றும் சமூகக் கொள்கை குறித்து பகுப்பாய்வு செய்து ஆலோசனை வழங்குதல்.

7. கோவிட் நோய் தொற்றின்போது பல்வேறு துறைகள் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் பெரும் தொற்றுக் காலத்திற்கு பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்துக் குழு உறுப்பினர்களுடன் பல்வேறு கூட்டங்களை நிதித்துறை ஏற்பாடு செய்தது. கூட்டங்களில் உறுப்பினர்களால் வழங்கப்பட்ட ஆலோசனைகள், அரசின் திட்டங்கள் மற்றும் கொள்கை முயற்சிகளாக மாற்றம் பெற்றுள்ளன.

**(ii) கூட்டாட்சி நிதி வடிவம்**

8. 2021-2022-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கூட்டாட்சி நிதி வடிவம் உருவாக்கும் பொருட்டு வருவாய் மற்றும் வரி விதிப்பு (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) தொடர்புடைய புகழ்பெற்ற சட்ட, பொருளாதார வல்லுநர்கள் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றினை அரசு நிறுவும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பின்படி, திரு.அரவிந்த் பி. டட்டார், மூத்த வழக்கறிஞர், உச்சநீதிமன்றம் அவர்களின்

தலைமையில் கீழ்க்கண்ட உறுப்பினர்களுடன் கூட்டாட்சி நிதி வடிவத்திற்கான ஆலோசனைக் குழு அரசாணை (நிலை) எண்.101, நிதித் (நிதிக்குழு-I) துறை, நாள் 02.04.2022-ன் படி அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

1. திரு. கி. வைத்தீஸ்வரன், வழக்கறிஞர்,
   சென்னை உயர் நீதிமன்றம்.
2. திரு. ஜி. நடராஜன், வழக்கறிஞர்,
   சென்னை உயர் நீதிமன்றம்.
3. திரு. சுரேஷ் ராமன், துணைத் தலைவர்
   மற்றும் மண்டலத் தலைவர்,
   டிசிஎஸ் - சேவைப் பிரிவு.
4. திரு.ஸ்ரீவத்ஸ் ராம்,
   மேலாண்மை இயக்குநர்,
   வீல்ஸ் இந்தியா லிட்.,
5. திரு.கே. வேல்முருகன், தலைவர்,
   ஓசூர் சிறு மற்றும் குறுந்தொழிற்சாலைகள் அமைப்பு.

இக்குழுவிற்கு வழங்கப்பட்ட வரையறை நியதிகள் (Terms of Reference) பின்வருமாறு:

1) மாநில மற்றும் ஒன்றிய அரசின் நிதி அதிகாரங்களை முக்கியமாக சரக்கு மற்றும் சேவை வரியை ஆய்வு செய்யவும்.

2) ஒன்றிய அரசால் விதிக்கப்படும் மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களால் மாநில நிதிகளில் ஏற்படும் தாக்கம் ஆகியவற்றை ஆய்வு செய்யவும்.

3) மாநிலத்தின் நிதி நிலைமையை பகுப்பாய்வு செய்யவும்.

4) சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பாக முடிவெடுப்பவர்களின் தற்சார்புரிமை மற்றும் சரக்கு மற்றும் சேவை வரித் தீர்ப்பாயத்தின் அமைப்பு உள்ளிட்ட சரக்கு மற்றும் சேவை வரியினை செயல்படுத்தும் இயக்க நடைமுறை சிக்கல்களை அடையாளம் காணவும்.

5) பெருந்தொழில் நிறுவனங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், சேவைத் துறைகள் மற்றும் நுகர்வோர்கள் எதிர்கொள்ளும் செயல்பாட்டு சிக்கல்களை கண்டறிந்து சரக்கு மற்றும் சேவை வரித் தீர்ப்பாயத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதும்.

6) பல்வேறு வகைப்பட்ட பொருட்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்கள் தொடர்பான சிக்கல்களை கண்டறியவும்.

7) சரக்கு மற்றும் சேவை வரி வசூல் மற்றும் மாநிலத்தின் இதர வரிகளை மேம்படுத்துவதற்கான மிகச்சிறந்த சட்ட நடைமுறைகளை பரிந்துரைக்கவும்.

8) சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பாக இதர மாநிலங்களில் பின்பற்றப்படும் மிகச்சிறந்த சட்ட நடைமுறைகள் மற்றும் வரி ஏய்ப்பினை அடையாளம் காண உதவும் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்டவைகளை ஆய்வு செய்யவும்.

9) ஆலோசனைக் குழுத் தலைவரின் கருத்தில் ஒன்றிய - மாநிலத்தின் நிதி உறவுகள் தொடர்புடைய பிற நடைமுறைச் சிக்கல்கள் ஏதேனுமிருப்பின் அவற்றை ஆய்வு செய்யவும்.

9. இந்த ஆலோசனை குழுவின் முதல் கூட்டம் ஏப்ரல் 11, 2022 அன்று தலைமைச் செயலகம், சென்னையில் நடைபெற்றது.

(iii) புதிய சொத்து மேலாண்மை அமைப்பு

10. 2022-2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், "அரசு சொத்துக்களை முறையாக கணக்கிட அனைத்து அரசுத் துறைகளில் இருக்கும் அசையும், அசையா சொத்துக்களின் விவரங்களை சேகரித்து, அவற்றின் பயன்பாட்டை கண்காணிக்க ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்துடன் (IFHRMS) இணைத்து ஒரு சொத்து மேலாண்மை மென்பொருள் (Asset Management Software) வரும் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது.

11. மேற்கூறிய அறிவிப்பின் அடிப்படையில், அரசுத் துறைகளில் உள்ள அனைத்து சொத்துக்களின் வாழ்க்கை சுழற்சியினை கண்காணித்து வளப் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக மேக கணினியம் அடிப்படையிலான உடைமை மேலாண்மை மென்பொருளானது (Cloud Based Asset

Management Software) தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் உருவாக்கப்பட்டுள்ளது.

12. இந்த மென்பொருள் தேவைகளின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் துறைகள் தங்களுக்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களையும் துல்லியமாக அறிந்து கொள்ள முடியும். இதையொட்டி, முறையான கணக்கியல், சொத்துக்களுக்கு நீண்ட ஆயுளை உறுதிப்படுத்தும் பராமரிப்புக்கான நிதி ஒதுக்கீட்டினை செயல்படுத்த ஏதுவாக அமையும். அவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள், கணக்கியல் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கென ஒருங்கிணைந்த மனித வள மேலாண்மைத் திட்டத்திலிருந்து (IFHRMS) பெறப்படும்.

13. தலைமைச் செயலகத்தில் உள்ள பொதுத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம் மற்றும் வணிகவரித் துறைகள் தங்கள் சொத்து விவரங்களை இந்த உடைமை மேலாண்மை மென்பொருளைப் பயன்டுத்தி

சோதனை அடிப்படையில் பதிவேற்றியுள்ளன. மேற்கூறிய மென்பொருளிலுள்ள சொத்து மற்றும் விவரங்களை நிதித்துறை புதுப்பித்து வருகிறது. மேலும், நிதித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து துறை அலுவலகங்களுக்கு சம்பந்தப்பட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் (DDOs) மூலம் விவரங்களைப் பதிவேற்ற தேவையான வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளது.

**(iv) மின்னணு கொள்முதல் வலைமுகப்பு**

14. 2021-2022 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், "அரசு கொள்முதல் முறைகளில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசிற்கென தனி மின்னணு கொள்முதல் வலைமுகப்பு ஒன்று உருவாக்கப்படும்" என அறிவிக்கப்பட்டது.

15. இந்த அறிவிப்பின் அடிப்படையில், தமிழ்நாடு அரசிற்கென தனி மின்னணு கொள்முதல் வலைமுகப்பு ஒன்று உருவாக்குவதற்காக தேசிய தகவலியல் மையத்தை (NIC) ஒற்றை ஆதாரமாக கருதி தேவைப்படும் விவரக் குறியீடுகளை இறுதி

செய்வதற்காக முக்கிய குழு (Core Committee) மற்றும் தொழில்நுட்ப குழு (Technical Committee) உருவாக்கப்பட்டுள்ளது.

16. தொழில்நுட்ப குழுவின் பரிந்துரையின் படி, தேசிய தகவல் மையத்தின் மூலம் மின் கொள்முதலை செயல்படுத்த தேசிய தகவல் மைய சேவைகள் நிறுவனத்திற்கு (NICSI) பணி ஆணை வழங்கப்பட்டது. தனிபயனாக்க தேவைகள் உட்பட 3 ஆண்டுகளுக்கு (ஏப்ரல் 2022–மார்ச் 2025 வரை) இத்திட்டத்திற்கான மொத்த செலவினம் ரூ.501.51 இலட்சம் ஆகும். 2022-2023-ஆம் ஆண்டிற்கான முன்பணமாக ரூ.167.17 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ன் கீழ் உள்ள வழிமுறைகளுக்கு ஏற்றவகையில் இந்த புதிய மின்னணு கொள்முதல் வலைமுகப்பு அமையும். தமிழ்நாடு அரசின் பொது கொள்முதல் அமைப்புகள் அனைத்தும் 2023-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாள் முதல் இணையதளத்தின் மூலம் மட்டுமே அனைத்து கொள்முதலையும் மேற்கொள்ளும். இந்த மாற்றத்தை எளிதாக்க தற்போதுள்ள விதிகள் மற்றும்

நடைமுறைகளில் தேவையான திருத்தங்கள் கொண்டுவர அரசு உத்தேசித்துள்ளது.

17. இவை போன்றே ஒப்பந்தப்புள்ளிக்கு முந்தைய/ பிந்தைய செயல்பாடுகளை மின்னணுமுறையில் நிறைவேற்றுவதற்காக, தற்போதுள்ள Government e-Procurement in National Informatics Cente (GePNIC)-ன் மென்பொருளில் துறைகளுக்கான தேவை விவரக் குறியீடுகள் / தனிப்பயனாக்கத்தைக் குறிப்பிடுவதற்கு அரசு பணிக்குழுவையும் அமைத்துள்ளது. அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் கொள்முதல்களிலும் அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை கொண்டு வருவதற்கான முக்கிய படியாக இந்நடவடிக்கை இருக்கும்.

## (v) அதிக நிதிச்சுமையை ஏற்படுத்தும் வழக்குகளுக்கான மேலாண்மை அமைப்பு

18. 2021-2022-ஆம் ஆண்டின் திருத்திய நிதிநிலை அறிக்கையில் அதிக நிதிச்சுமையை ஏற்படுத்தும் வழக்குகளுக்கான மேலாண்மை அமைப்பு உருவாக்கப்படும் என்று வெளியிடப்பட்ட

அறிவிப்பின் அடிப்படையில், அரசாணை (ப) எண்.18, நிதி(அ.ந.மு.-பவ)த் துறை, நாள் 19.03.2022ல் பின்வரும் உறுப்பினர்கள் அடங்கிய உயர் அதிகாரம் கொண்ட வழக்கு ஆலோசனை மற்றும் மேற்பார்வை குழுவை அரசு அமைத்துள்ளது.

| வரிசை எண். | குழு உறுப்பினர்கள் |
|---|---|
| 1. | நீதிபதி K.கண்ணன்(ஓய்வு)<br>பஞ்சாப் மற்றும் அரியானா உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி மற்றும் இரயில்வே கோரிக்கைகள் தீர்ப்பாய முன்னாள் தலைவர் |
| 2. | வழக்குரைஞர்.ஜோசப் பிரபாகர், மறைமுக வரிவிதிப்பு வல்லுநர் |
| 3. | வழக்குரைஞர்.K.ரவி, நேரடி வரி விதிப்பு வல்லுநர் |
| 4. | வழக்குரைஞர்.V.லஷ்மிநாராயணன், உரிமையியல் வழக்கு வல்லுநர் |
| 5. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, |
| 6. | அரசு செயலாளர், சட்ட விவகாரங்கள். |

19. இக்குழுவின் பணிகள், நீதிமன்ற வழக்குகளால் அரசிற்கு ஏற்படும் நிதிச் சுமைகளை குறைப்பதற்கான உத்திகளைத் தெரிவித்தல், நீதிமன்ற அமைப்புகளில் பின்பற்றப்பட வேண்டிய பல்வேறு அணுகுமுறைகள் மற்றும் கடைபிடிக்க வேண்டிய சிறந்த தர்க்க வழிகளை ஆலோசனை வழங்குதல், குறிப்பிட்ட வழக்கில் வெற்றி வாய்ப்புகளை மதிப்பீடு செய்து இணக்கமாக செல்லுதல் அல்லது வழக்கின் நிலைகளை மாற்றியமைத்தல் முதலியவைற்றுக்கான வாய்ப்புகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல், அதிக நிதிச்சுமையை உருவாக்கக்கூடிய வழக்குகளில் நிதிச்சுமைகளை குறைக்கும் பொருட்டு ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் தாமதத்திற்கான அபராத வட்டி போன்ற மிகை செலவுகளை தவிர்க்கும் வகையில் நீதிமன்ற ஆணைகளின் நிறைவேற்றத்தை கண்காணித்தல் ஆகியவையாகும்.

அரசிற்கு அதிக நிதிச்சுமையை ஏற்படுத்தக்கூடிய வழக்குகள் அனைத்தையும் கூர்ந்து கண்காணிக்கும் பொருட்டு, ஒருங்கிணைந்த

நீதிமன்ற வழக்குகள் கண்காணிப்பு அமைப்பில் (ICCMS) இதற்கென தனியாக வசதி ஏற்படுத்தப்படும்.

**(vi) நிதி (பொதுத்துறை நிறுவனங்களின் மாநிலக் கழகம்) துறையை வலுப்படுத்துதல்**

20. நிதித்(பொதுத்துறை நிறுவனங்களின் மாநிலக் கழகம்) துறையை வலுப்படுத்துதலின் ஒரு பகுதியாக, பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சட்டப்பூர்வ வாரியங்களின் ஆண்டு / காலாண்டு அறிக்கைகளை ஆய்வு செய்யவும், இயக்குநர் குழு கூட்ட குறிப்புகள் மற்றும் நடுத்தர கால தொலைநோக்கு அறிக்கைகளை ஆய்வு செய்யவும், பொதுத்துறை நிறுவனங்களின் கடந்த கால மற்றும் தற்போதைய நிதி மற்றும் செயல்பாட்டு பகுப்பாய்வினை மேற்கொள்ளவும் மற்றும் நிதி (பொதுத்துறை நிறுவனங்களின் மாநிலக் கழகம்) துறையில் திட்ட மேலாண்மை பிரிவாக செயல்படவும் 20.04.2022 அன்று ஆலோசகரைத் தேர்ந்தெடுப்பதற்கான முன்மொழிவு கருத்துருவிற்கான ஒப்பந்தப்புள்ளி கோரி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

### (vii) நபார்டு திட்ட கண்காணிப்புப் பிரிவு

21. நபார்டு வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் தற்போதைய திட்டங்களை தொடர்ந்து கண்காணிக்கவும், அனுமதியளிக்கப்பட்ட திட்டங்களை நேரில் சென்று கண்காணிக்கவும் மற்றும் அத்திட்டங்களுக்கு நிதி அளிப்பதை விரைவுபடுத்தவும், அத்திட்டங்களை திறம்பட செயல்படுத்தும் நோக்கத்துடன் "நபார்டு திட்ட கண்காணிப்புப் பிரிவு" உருவாக்கப்படும். அரசின் திட்டங்களுக்கு நிதியளிப்பது தொடர்பான இதர நிறுவன மற்றும் அந்நிய முதலீட்டு வழிமுறைகளை கண்டறிவது குறித்தும் இப்பிரிவு உரிய பணிகளை மேற்கொள்ளும்.

### (viii) வரவு செலவுத் திட்ட முயற்சிகள்
### தன்னதிகார வரவு செலவுத் திட்டம்

22. வரவு செலவுத் திட்ட உருவாக்கத்தில் நவீன நடைமுறைகளை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன், 2022-23 வரவு செலவுத் திட்டத்தில் பின்வரும் ஐந்து மானியங்களுக்கான கோரிக்கைகளில் தன்னதிகார வரவு செலவுத்

திட்ட நடைமுறை எனும் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(i) மீன்வளம் மற்றும் மீனவர் நலன்
(ii) பால்வளம்
(iii) சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்
(iv) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்
(v) மாற்றுத் திறனாளிகள் நலன்

தன்னதிகார வரவு செலவுத்திட்ட முறையானது, விரைவாக முடிவெடுத்தல், மேம்படுத்தப்பட்ட செயல்முறை, செலவினங்கள் குறைப்பு மற்றும் அதிக பொறுப்புணர்வை உறுதி செய்யும் அதே வேளையில் கால நேர விரயத்தை தவிர்ப்பதற்கும் துறைகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கவும் முயல்கிறது.

23. தற்போதுள்ள நடைமுறையில், வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் குறித்து முன்மொழிவுகள் வரப்பெற்று, சம்பந்தப்பட்ட துறைகளுடன் கூட்டங்கள் நடத்தப்பட்டு, ஒவ்வொரு நுணுக்கத் தலைப்புக்குண்டான செலவினத்தின் தேவைகள் ஆய்வு செய்யப்பட்டு,

பின்னர் நிதித்துறையால் மதிப்பீடுகள் நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறு இறுதி செய்யப்பட்ட தொகைகள் மொத்த நிதியொதுக்கீட்டிற்காக சேர்க்கப்படும்.

24. உயர்மட்ட அளவிலான விரிவான வரவு செலவுத் திட்ட முறையில், ஒட்டுமொத்த ஆண்டிற்கான வருவாய், மூலதனம் மற்றும் கடன் செலவினங்களின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தீர்மானிக்கப்பட்டு, பின்னர் சம்பந்தப்பட்ட துறைக்குத் தெரிவிக்கப்படும். இந்த மொத்த நிதியொதுக்கத்திலிருந்து உள்தலைப்புகள், நுணுக்கத் தலைப்புகள் மற்றும் உள்நுணுக்கத் தலைப்புகளுக்கு உண்டான பல்வேறு செலவினங்களுக்கு நிதி ஒதுக்கீடு துறைகளால் செய்ய இயலும். மேலும், சில நிபந்தனைகளுக்குட்பட்டு, நிதியாண்டின் போது தேவைப்படுமாயின், மறு நிதியொதுக்கம் வாயிலாக ஏனைய கணக்குத் தலைப்புகளுக்கும் துறை தலைமையே நிதியொதுக்கம் மேற்கொள்ள முடியும்.

**வரவு செலவுத் திட்டம் குறித்த குடிமக்களுக்கான கையேடு**

25. வரவு செலவுத் திட்ட மதிப்பீடு வெளியீடுகளில், ஒரு புதிய முயற்சியாக, வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன், 2022-2023 நிதியாண்டிற்கான ‘வரவு செலவுத் திட்டம் குறித்த குடிமக்களுக்கான கையேட்டினை நிதித்துறை வெளியிட்டுள்ளது. வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய அம்சத்தை மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையான வடிவிலும் வரைபட வடிவிலும் இந்த ஆவணம் வெளிப்படுத்தியுள்ளது. இந்த ஆவணம் வரவு செலவுத்திட்டம் குறித்த குடிமக்களின் விழிப்புணர்வை அதிகரிக்கவும், அரசின் நிதிநிலைக் குறித்த அறிவார்ந்த விவாதங்களை ஊக்குவிக்கவும் கருவியாக செயல்படும்.

**பன்னாட்டு நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவி**

26. மாநிலத்தின் பொது நிதி நிருவாகத்தில், குறிப்பாக வரவு செலவுத் திட்ட மதிப்பீடு உருவாக்கம் மற்றும் நிதி இடர் மேலாண்மை

ஆகியவற்றில் சீர்திருத்தங்களைக் கொண்டு வர பன்னாட்டு நாணய நிதியத்துடன் நிதித்துறை இணைந்து செயல்பட்டு வருகின்றது.

பொதுநிதி நிருவாக சீர்திருத்த நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக, பேரியல் நிதி பிரிவு, நிதி இடர் மேலாண்மை பிரிவு மற்றும் கடன் மற்றும் நிதி ஆதார மேலாண்மை பிரிவு என மூன்று சிறப்புப் பிரிவுகள் நிதித்துறையில் உருவாக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக, 2022-2023 நிதியாண்டிற்கான வரவு செலவுத்திட்டம் குறித்த குடிமக்களுக்கான கையேடு வெளியிடப்பட்டுள்ளது மற்றும் ஐந்து மானியக் கோரிக்கைகளில் தன்னதிகார வரவு செலவுத் திட்ட நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், நிதி இடர் அறிக்கை மற்றும் மத்திய கால நிதிக் கட்டமைப்பினையும் நிதித்துறை தயாரிக்கும்.

(ix) சிறப்புப் பணிக்குழு

27. 2021-2022 நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, ஒரு சிறப்புப் பணிக்குழு (STF) கீழ்க்கண்ட பரந்துபட்ட குறிக்கோள்களை எய்துமுகத்தான் தோற்றுவிக்கப்பட்டது:

- வங்கிக் கணக்குகளில் உள்ள நிதியை முழுமையாகக் கண்டறிந்து, அதில் காலம் கடந்துவிட்ட, பயன்படுத்தப்படாத நிதியைக் கண்டறிதல் மற்றும் அக்கணக்குகளை முழுமையாக சரிசெய்தல்.

- அனைத்து அரசு நிதியை கருவூல அமைப்பின் பார்வை வரம்பிற்குள், கட்டுப்பாட்டில் வைத்தல்.

28. வங்கிக் கணக்கு விவரங்கள் வங்கிகள், துறைகள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. அவை ஒப்பிடப்பட்டு சரிபார்க்கப்பட்டுள்ளது. பல்வேறு வழிகளில் சேகரிக்கப்பட்ட விவரங்களில் இருந்து பெருவாரியான தரவுகளில் முன்பின் முரண்பாடு கண்டறியப்பட்டது. இவற்றை சரிசெய்ய வங்கிகள், மாநில அளவிலான வங்கிகளின் குழு

(SLBC) வாயிலாகவும், மாவட்டங்கள் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) வாயிலாகவும் இருதரப்பு நேர்செய்யும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

சிறப்புப் பணிக்குழு, இச்செயல்முறையின் வாயிலாக, அரசுக் கணக்கில் மீண்டும் கொணரத்தக்க பயன்படுத்தப்படா நிதியை இனம் கண்டுள்ளது. சிறப்புப் பணிக்குழு, தெரிவிக்கப்பட்ட கணக்கு விவரங்களை தணிக்கை செய்வதன் மூலம் தனது பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றது. சிறப்புப் பணிக்குழு 31.03.2023 வரையிலான பணிக்காலத்தில் தனது இலக்கினை நிறைவு செய்யும்.

**(x) உள்ளிருப்பு பயிற்சித் திட்டம்**

29. முதுநிலைப் பட்டதாரிகள் மற்றும் புகழ்பெற்ற நிறுவனங்களில் ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு நிதித்துறையில் ஒரு உள்ளிருப்பு பயிற்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பயிற்சித் திட்டமானது பொருளாதாரம், நிதி, சட்டம், வணிகம், மேலாண்மை மற்றும் தகவல்

தொழில்நுட்பம் மற்றும் புள்ளியியல் ஆகிய துறைகளில் உள்ள மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு குறிப்பிட்ட துறையின் செயல்பாடுகள் மீதான அனுபவத்தைக் கொடுக்கவும், தளராத உழைப்பு மற்றும் அறிவார்ந்த ஆராய்ச்சிப் பணி வாயிலாக திறமையைப் பயன்படுத்துவதற்குமான திட்டமாகும்.

30. திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனம் (BIM), இப்பயிற்சித் திட்டத்தை செயல்படுத்துவதற்கான கல்விப் பங்கு நிறுவனமாகும் (Academic Partner). இப்பயிற்சித் திட்டத்திற்கான தேர்வு மற்றும் மதிப்பீட்டினை இந்த நிறுவனம் மேற்கொள்ளும்.

❖ **பயிற்சித் திட்டத்தின் முதன்மையான நோக்கங்கள்:**

i. தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு தமிழ்நாடு அரசின் நிதித்துறை பற்றி முழுமையான அறிமுகத்தை குறுகிய காலத்தில் ஏற்படுத்துதல்.

ii. தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் கல்வி அறிவை மேம்படுத்துவதற்கு வாய்ப்பு அளித்தல்.

iii. தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் அரசின் செயல்பாடுகள் மற்றும் மேம்பாட்டுக் கொள்கைகளை தெரிந்துகொள்ள வாய்ப்பு அளித்தல்.

iv. ஆராய்ச்சி, பகுப்பாய்வு முதலியவற்றில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வதன் வாயிலாக கொள்கை உருவாக்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் பங்களித்தல்.

❖ **பயிற்சியாளர்களுக்கான ஆய்வுக்கான முக்கிய துறைகள்:**

i. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம்

ii. ஆண்டு வரவு-செலவுத் திட்டம்

iii. மத்திய மற்றும் மாநில நிதிக் குழுக்கள்

iv. வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள்

v. தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டம் மற்றும் விதிகள்

vi. வள ஆதாரங்கள்

vii. கடன்கள்

viii. தணிக்கை

ix. கருவூல செயல்பாடுகள்

- தொடக்கத்தில் 20 மாணவர்கள் 6 மாதம் முதல் ஒரு வருடம் வரையான காலத்திற்கு இப்பயிற்சி திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். பயிற்சியாளர்களுக்கு மாதாந்திர உதவித் தொகையாக ரூ.20,000/- வழங்கப்படும்.

- திருச்சிராப்பள்ளிலுள்ள பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்தால் நடத்தப்படும் இணைய வழியிலான ஓர் தேர்வு வாயிலாக பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

- பயிற்சியாளர்கள் சென்னையிலுள்ள அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியில் பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனம், திருச்சிராப்பள்ளி மற்றும் நிதித்துறை இணைந்து நடத்தும் வழிகாட்டும் பயிற்சியில் பயிற்சி பெறுவார்கள்.

- பயிற்சி முடிந்ததும், நிபுணர் குழுவினரால் நடத்தப்படும் விரிவான வாய்மொழித் தேர்வு மற்றும் அறிவியல்பூர்வ மற்றும் சான்றுகள் மீதான திட்ட அறிக்கையை சமர்ப்பித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் பயிற்சி சான்றிதழ் வழங்கப்படும்.

## நிதித்துறையின் அமைப்பு

31. பின்வரும் துறைகள் / முகமைகள் நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ளன:-

| | |
|---|---|
| **தணிக்கைத் துறைகள்** | |
| i. | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை |
| ii. | கூட்டுறவுத் தணிக்கைத் துறை |
| iii. | மாநில அரசு தணிக்கைத் துறை |
| iv. | பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை |
| v. | இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை |
| **நிருவாகத் துறைகள்** | |
| i. | கருவூலக் கணக்குத் துறை |
| ii. | அரசு தகவல் தொகுப்பு விவர மையம் |
| iii. | சிறுசேமிப்புத் துறை |
| iv. | ஓய்வூதிய இயக்ககம் |
| **இதர முகமைகள்** | |
| i. | தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் |
| ii. | தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம்(TNIFMC) |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் இக்கொள்கை விளக்கக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன. ஓய்வூதிய இயக்ககம் மற்றும் அரசு தகவல் தொகுப்பு விவர மையம் ஆகியவற்றின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம், கோரிக்கை எண்.50 "ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்" குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

**தணிக்கைத் துறைகள்**

**32. தற்போது தணிக்கைத் தொடர்பான பின்வரும் துறைகள் நிதித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.**

| வ. எண் | தணிக்கைத் துறைகளின் பெயர்கள் |
|---|---|
| 1. | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை |
| 2. | கூட்டுறவுத் தணிக்கைத் துறை |
| 3. | மாநில அரசு தணிக்கைத் துறை |
| 4. | பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை |
| 5. | இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை |

## தலைமைத் தணிக்கை இயக்குநர்

33. தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஜுன் 21, 2021 அன்று இடம் பெற்ற ஆளுநர் உரையில், தணிக்கை மற்றும் மேற்பார்வை செயல்பாடுகளில் முழுமையான மறுசீரமைப்பு தேவை என்று சுட்டிக்காட்டப்பட்டது. 2021-2022 ஆம் ஆண்டிற்கான நிதித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில், "மாநில அரசின் தற்போதைய அனைத்து தணிக்கைத் துறைகளையும் மேற்பார்வையிட தலைமைத் தணிக்கை இயக்குநர் என்ற பதவி நிலை உருவாக்கப்படும். அவர் இந்திய தணிக்கை மற்றும் கணக்கு துறையிலிருந்து மாற்றுப்பணியில் பணியமர்த்தப்படுவார் மற்றும் அனைத்து தணிக்கைத் துறைகளின் தணிக்கைச் செயல்பாடுகளுக்கான ஒரே நிருவாக மேற்பார்வை துறைத் தலைவராக செயல்படுவார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட குறிப்பின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண்.102, நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை, நாள் 07.04.2022-இல் நிதித் துறையின் கீழ் செயல்படும் அனைத்து தணிக்கைத் துறைகளையும் மேற்பார்வையிட

தலைமைத் தணிக்கை இயக்குநர் என்ற பதவி உருவாக்கப்பட்டுள்ளது.

34. அனைத்துத் தணிக்கைத் துறைகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்வதற்கும், தணிக்கைத் துறையின் செயல்முறைகள் மற்றும் செயல்பாடுகளை சீராக்க பரிந்துரைகளை வழங்குவதற்கும், ஒரு தணிக்கை சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தணிக்கை சீர்திருத்தக் குழுவின் அமைப்பு பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| தலைவர்: | | திரு. சுந்தரம் பிரபு, IAAS (ஓய்வு) தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலத்தின் முன்னாள் மாநில கணக்காயர். |
| உறுப்பினர்கள்: | 1. | திரு. செல்வின் ஜோசப், கூட்டுறவு தணிக்கைத் துறையின் முன்னாள் கூடுதல் இயக்குநர். |
| | 2. | திருமதி. K. பிரமிளா, இயக்குநர், பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை. |

**குழுவின் முக்கிய வரையறை நியதிகள் (Key Terms of Reference)**

- தணிக்கைத் துறைகளின் தணிக்கை செயல்முறையை ஆய்வு செய்தல்
- உள் தணிக்கை முறையில் சர்வதேச சிறந்த நடைமுறைகளை பரிந்துரைத்தல்
- ஒரு விரிவான IT/IS அமைப்பை நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்தல்
- பயிற்சி தேவைகள் உட்பட மனித வள தேவைகளை ஆய்வு செய்தல்
- தணிக்கை வரம்பினை விரிவாக்க இடர் அடிப்படையிலான தணிக்கை போன்ற வலுவான மற்றும் நன்கு நிரூபிக்கப்பட்ட வழிமுறைகளைப் பரிந்துரைத்தல்

35. இக்குழு தனது அறிக்கையினை ஜூலை 2022க்குள் சமர்ப்பிக்கும். இந்தக் குழுவின் பரிந்துரைகள் கிடைத்தவுடன், தேவையற்றவைகளை நீக்கி, திறன்மிகு செயல்பாட்டை உறுதிசெய்யும் ஒரு ஒருங்கிணைந்த தணிக்கை முறையை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தணிக்கைத் துறைகளின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:-

### உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

36. மாநிலத்திலுள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், வேளாண்மை விற்பனைக் குழுக்கள், மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் மற்றும் இதர நிறுவனங்களின் கணக்குகளை அவற்றுக்குரிய சட்ட விதிகளின் கீழ் தணிக்கை செய்யும் பணி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையைச் சார்ந்ததாகும். இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014 (த. நா. சட்ட எண்.24) நிறைவேற்றப்பட்டு 15.12.2014 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் 24.08.2016 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

37. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014-இன் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களின் தணிக்கையைத் தவிர பிரிவு 5-ன்படி அரசின் முன் அனுமதியுடன் இதர

நிறுவனங்களின் தணிக்கையும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரால் சட்டப்பூர்வமாக மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு உள்ளாட்சி நிதிச் சட்டம் 2014 பிரிவு 20-இன் கீழ் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் தன்னால் தணிக்கை செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் மீதான தொகுப்பு அறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் அரசுக்கு சமர்ப்பிக்கவேண்டும். அரசு அதனை சட்டமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

38. தமிழ்நாடு சட்டமன்றத்தில் தணிக்கை அறிக்கையினை தயாரித்து சமர்ப்பிப்பது குறித்து மாநில கணக்காயரால் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தணிக்கை அறிக்கை வடிவத்தை அவ்வப்போது மாற்றி அமைக்கவும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் 2016 வகை செய்கிறது. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014 பிரிவு 20 மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் 2016, விதி 19-ன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் ஆண்டுதோறும் தொகுப்புத் தணிக்கை அறிக்கை சட்டமன்றத்தில் வைப்பதற்காக அரசிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பின்வரும் தொகுப்புத் தணிக்கை அறிக்கைகள் சட்டமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | ஆண்டு | தற்போதைய நிலை |
|---|---|---|
| 1) | 2015-2016 | 09.07.2018 அன்று சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது |
| 2) | 2016-2017 | 05.02.2021 அன்று சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது |
| 3) | 2017-2018 | 13.09.2021 அன்று சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது |
| 4) | 2018-2019 | |
| 5) | 2019-2020 | 24.03.2022 அன்று சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது |
| 6) | 2020-2021 | தணிக்கை அறிக்கை தயாரிக்கும் பணி செயல்பாட்டில் உள்ளது. |

39. தற்போது உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் நிறுவனங்களின் விவரம் இணைப்பு -1(அ)-இல் உள்ளது.

**உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் நோக்கம்**

40. இத்துறையால் உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்படும் தணிக்கையானது பின்தணிக்கைப் பணிகளை உறுதி செய்யக்கூடிய பொதுவான தேவைகளை பூர்த்தி செய்கின்றது. உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளைச் சரிபார்த்தல், வரவு செலவுகள் முறையாக உள்ளனவா எனச் சரிபார்த்தல், மேற்படி வரவு செலவுகள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்குட்பட்டும் விதிகளின்படியும், அரசாணைகளின் படியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதனை உறுதி செய்தல், உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் அவ்வமைப்புகளின் செயல்பாட்டின் உண்மை நிலையைப் பிரதிபலிக்கின்றனவா என்பதை சரிபார்த்தல் ஆகிய நோக்கங்களோடு உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரி செலுத்துவோரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதனை உறுதி செய்வதோடன்றி உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு மற்றும் பிற நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள்

வழங்கும் நிதி முழுவதும் வழங்கப்பட்ட காரணங்களுக்காக பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் அவை உரிய பயனாளிகளின் நலனுக்கு பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் தணிக்கையில் உறுதி செய்யப்படுகிறது.

**கிராம ஊராட்சி அமைப்புகளின் சோதனைத் தணிக்கை**

41. கிராம ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில் மொத்த ஊராட்சிகளின் எண்ணிக்கையில் 22 சதவிகிதம் சோதனைத் தணிக்கையாக உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மொத்தம் உள்ள 12,524 ஊராட்சிகளில் ஆண்டு தோறும் 2,831 கிராம ஊராட்சிகளில் சோதனைத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் உடன் நிகழ் தணிக்கை (Concurrent Audit)**

42. தற்போது 19 மாநகராட்சிகளிலும், 10 நகராட்சிகளிலும் மற்றும் 13 பல்கலைக்கழகங்களிலும் உடன் நிகழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2000-2001-ஆம்

ஆண்டு முதல், ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் காலாண்டுத் தணிக்கை முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி 116 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு ஆய்வாளர் மற்றும் ஒரு துணை ஆய்வாளர் அல்லது ஒரு உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு குழு வீதம் தணிக்கைக் குழுக்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ளன.

**மாநகராட்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளில் உடன்பின்-தணிக்கை (Immediate Post Audit) முறையை அமல்படுத்தப்படுதல்**

43(a). உடன்நிகழ் தணிக்கைச் செயல்படுத்தப்படுகின்ற 19 மாநகராட்சிகளிலும் 10 நகராட்சிகளிலும் உடன்பின் தணிக்கை செயல்பட்டு வருகின்றது. இம்முறையின்படி செலவுச் சீட்டுகள் உடனுக்குடன் தணிக்கை செய்யப்பட்டு, குறைபாடுகள் நிருவாகத்திற்கு தெரிவிக்கப்படுகின்றது. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை உடனுக்குடன் நிருவாகத்தால் களைய இச்செயல்முறை

வழிகோலுகிறது. உடன்நிகழ் தணிக்கை செயல்படுத்தப்படுகின்ற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் விவரம் இணைப்பு 1-(ஆ)-இல் காணலாம்.

(b). உடன் நிகழ் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புரைகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அவற்றிற்குப் பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு குறைகள் சரி செய்யப்பட்டதை உறுதி செய்யுமிடத்து, அந்த தணிக்கை மறுப்புரைகள் நீக்கப்பட்டு, நிலுவையில் உள்ள மறுப்புரைகளையும் வரவு மற்றும் செலவுகள் தொடர்பான பத்திகளும் இறுதி செய்யப்பட்டு அவற்றை உள்ளடக்கியதாக தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

**உடன்நிகழ் தணிக்கைக்குட்படாத பிற அமைப்புகளின் தணிக்கை**

44. உடன்நிகழ் தணிக்கைக்குட்படாத எஞ்சியுள்ள 2 மாநகராட்சிகள், 105 நகராட்சிகள், 10 பல்கலைக்கழகங்கள், இதர உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், மாவட்ட

ஊராட்சிகள், விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும் மேற்படி நிறுவனங்களிலிருந்து ஆண்டுக் கணக்குகள் பெறப்பட்டபின்னர், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிகழ்வின் அடிப்படையிலான (Accrual based) கணக்கு வைப்பு முறையை செயற்படுத்துதல்**

45.(i) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நிகழ்வின் அடிப்படையிலான கணக்கு வைப்பு முறை (Accrual based Accounting System) 1999–2000, 2000-2001 ஆகிய கணக்காண்டுகளிலிருந்து இரு கட்டங்களாக செயற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து பேரூராட்சிகளிலும் 2002-2003 ஆம் ஆண்டு முதல் இந்த கணக்கு முறை செயல்படுத்தப்பட்டுள்ளது. 2016-2017 முதல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 7 இலக்க

குறியீடுகளை கொண்ட தேசிய அளவிலான நகராட்சிகளின் கணக்கு நடைமுறை சார்ந்த கணக்கீடு முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

(ii) ஓர் ஆண்டின் நிதி சார் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக் கணக்குகளையும் (Income and Expenditure Account) ஒரு குறிப்பிட்ட கால அளவில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் உண்மையான நிலையை அறிந்து கொள்ள உதவும் இருப்புநிலைக் குறிப்புகளையும் (Balance Sheet) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகளின்படி (GAAP) தயாரித்து கணக்குகள் பேணுவதே இந்த கணக்கு முறையின் உள்ளடக்கம் மற்றும் நோக்கமாகும்.

(iii) இந்த நடைமுறையினால் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அவற்றின் சொத்துக்களை உரிய மதிப்பீட்டு முறைகளோடும், சொத்துப் பதிவேட்டின் மூலமும் கணக்குகளில் சேர்த்து அறிந்துகொள்ள முடியும். வெளிப்படைத்

தன்மையுள்ள இந்த புதிய கணக்கு முறைகளைச் செயல்படுத்தியிருப்பதால், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பல்வேறு மூலதன திட்டங்களுக்கும் நலத்திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்க பல நிதி நிறுவனங்கள் முன் வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

**உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் ஆண்டுக் கணக்குகளுக்கு தணிக்கை சான்று வழங்குதல்:**

46. (i) உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று, கடன் வழங்கும் பல்வேறு நிறுவனங்களிலிருந்து நிதி பெறுவதற்கு அத்தியாவசியமானதாகும். மேலும் தணிக்கைச் சான்று அளிக்கப்படாத கணக்குகள் அங்கீகாரமற்றது என்பது சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். எனவே அரசாணை (நிலை) எண்.93, நிதி (நிதிக்குழு-IV)த் துறை, நாள் 28.03.2003-இல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டு வரும் நிகழ்வின் அடிப்படையிலான கணக்குப்பதிவு (Accrual Based Accounting) முறைப்படி கணக்குகள் தயார்

செய்யப்பட்டு இத்துறையால் தணிக்கை செய்யப்பட்டு சான்றளிக்கப்படுகின்றன.

(ii) பல்கலைக் கழக மானியக்குழு, மாநில / ஒன்றிய அரசு மற்றும் இதர நிதி அளிக்கும் நிறுவனங்களால் இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் பயன்படுத்தபட்டதற்கு இத்துறையினால் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

**தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யும் நடைமுறை**

47. (i) தணிக்கை அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின் போது கண்டறியப்படும் பெரும் முறைகேடுகள் உடனடியாக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாக அலுவலர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பெரும் முறைகேடுகள் மற்றும் தொகை இழப்புகள் பற்றிய விவரங்கள்


தனியறிக்கைகள் மற்றும் மாதாந்திர கால முறை அறிக்கைகள் வாயிலாக அரசுக்கும், சம்பந்தப்பட்ட நிருவாகத் துறைகளின் தலைவர்களுக்கும் தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தெரியப்படுத்தப்படுகின்றன.

(ii) தணிக்கை மறுப்புரைகளுக்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு ஏற்கத்தக்க விளக்கங்கள் அளிக்கும் நிலையில் தணிக்கைத் தடைகள் நீக்கப்படுகின்றன. மேலும் தணிக்கைத் தடைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிருவாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்டமர்வின் மூலமாகவும், இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களால் தணிக்கைத் தடைகளுக்கு உடனடி தீர்வு காணப்படுகிறது.


(iii) தணிக்கையின் போது தொடக்க நிலை மற்றும் இறுதி நிலை விவாதமுறை பின்பற்றப்படுவதால், தணிக்கையில் அவ்வப்போது சுட்டிக்காட்டப்படும் தவறுகளைச் சரி செய்ய இது வாய்ப்பாக அமைகிறது.

## 48. மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு மற்றும் மாநில அளவிலான உயர் நிலைக் குழு அமைத்தல்

### மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு




### மாநில அளவிலான உயர் நிலைக் குழு



- 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் நான்கு மாநகராட்சிகளுக்கு மாவட்ட அளவிலான உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு ரூ.2106.09 இலட்சம் மதிப்புள்ள 153 சிறப்பு தணிக்கைத் தடைகள் மீது முடிவெடுக்கப்பட்டுள்ளது.

- 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் மூன்று நகராட்சிகளுக்கு மாவட்ட அளவிலான உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு ரூ.703.17 இலட்சம் மதிப்புள்ள 86 சிறப்பு தணிக்கைத் தடைகள் மீது முடிவெடுக்கப்பட்டுள்ளது.

- 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் 47 ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாவட்ட அளவிலான உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு ரூ.3002.07 இலட்சம் மதிப்புள்ள 704 சிறப்பு தணிக்கைத் தடைகள் மீது முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**சிறப்புப் பணிகள்**

49. வழக்கமான தணிக்கைப் பணிகளுடன் கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**(a) உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல்:**

நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்கு சான்று / ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 31.03.2022 அன்றைய நிலவரப்படி 30,490 **ஓய்வூதியதாரர்கள்**, நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். ஓய்வூதியத்திற்கான தொகை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களால் மாநில நிதி ஆணைய பகிர்வு நிதி தொகையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**(b) உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்கள் குறைகள் தீர்த்தல்**

உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் தங்கள் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் முன்மொழிவுகள் தொடர்பான குறைகளை களைவதற்கும் தேவைப்படும் விவரங்களைக் காலதாமதம் இன்றி உடன் பெற்றுக் கொள்வதற்காகவும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**(c) நகராட்சி ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் நிருவகித்தல்**

ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை (நிலை) எண்.120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.5.1999 இன் படி, நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு 01.08.1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. 01.04.2021 முதல் 31.03.2022 முடிய

ஓய்வூதியதாரர்கள் நலத்திட்டத்தின் கீழ் 105 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 46.31 இலட்சம் ரூபாயும், 01.04.2021 முதல் 31.03.2022 வரையான காலத்தில் ஓய்வூதியதாரர்கள் குடும்ப பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 239 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 106 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(d) ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் நிருவகித்தல்**

ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை (பல்வகை) எண்.23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ7)த் துறை, நாள் 15.03.2013-இன்படி, ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களுக்கு 01.04.2013 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் கீழ் 01.04.2021 முதல் 31.03.2022 வரையான காலத்தில் ஓய்வூதியதாரர்கள் நலத்திட்டத்தில் 167 கோரிக்கைகள் தீர்வு

செய்யப்பட்டு 76.33 இலட்சம் ரூபாயும் 01.04.2021 முதல் 31.03.2022 முடிய குடும்ப பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 392 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 173.54 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(e) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்**

உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றிலிருந்து செய்யப்பட்ட முதலீடுகளும் அரசால் 1967-ஆம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளின் இருப்புகளுக்கு வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 01.04.2021 முதல் 31.03.2022 வரையான காலத்தில் ரூ.18 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக அளிக்கப்பட்டுள்ளது.

### (f) அறக்கட்டளைகளின் பொருளாளர்

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், 01.04.1952 முதல் இத்துறையால் பராமரிக்கப்படும் அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அறக்கட்டளைகளை அரசு ஏற்று ஒப்பளித்து அறக்கட்டளைகளின் நிருவாகத் திட்டங்களை அரசிதழில் வெளியிடுகிறது.

தற்போது அறக்கட்டளை நிதிப் பொருளாளர் கட்டுப்பாட்டில் 23.25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 4 மத்திய அறக்கட்டளைகளும், 37.04 கோடி ரூபாய் மதிப்புள்ள 891 மாநில அறக்கட்டளைகளும் உள்ளன. 01.04.2021 முதல் 31.03.2022 வரையான காலத்தில் 656 அறக்கட்டளை நிறுவனங்களுக்கு ரூ.65.79 இலட்சம் உதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்படுவதற்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்படும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத் தணிக்கை**

50. அரசாணை (நிலை) எண். 260, நிதி (ஓய்வூதிய குறை தீர்ப்பு)த் துறை, நாள்

15.10.2015-ன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத் (Contributory Pension Scheme) தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் பணியாளர்களின் சந்தா மற்றும் நிருவாக பங்களிப்பின் சரித்தன்மை உறுதி செய்யப்படுகிறது. 31.03.2022 அன்றைய நிலையில் 2019-2020-ஆம் ஆண்டிற்கு 381 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 2020-2021-ஆம் ஆண்டிற்கு 342 ஊராட்சி ஒன்றியங்களின் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியக் கணக்குகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதர உள்ளாட்சி அமைப்புகளான 21 மாநகராட்சிகள், 115 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சி நிறுவனங்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட தரவுகளையும் அதன் சரித்தன்மையினையும் தணிக்கைத் துறையினரால் சரிபார்க்கப்பட்டு தணிக்கையில் அங்கீகரித்து ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**தணிக்கை நிலை முன்னேற்றம்**

51. 2020-2021-ஆம் ஆண்டுக்கான அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் இதர நிறுவனங்களின் தணிக்கை முடிவுற்றுள்ளது. 2020-2021-ஆம் ஆண்டுக்கான கிராம ஊராட்சிகளின் 22% சோதனைத் தணிக்கை முடிவுற்றது.

**தணிக்கைக் கட்டணம்**

52. இத்துறையானது தணிக்கைக்கு மொத்த செலவினத்தில் கீழ்க்கண்டவாறு தணிக்கை கட்டணமாக வசூலித்து வருகிறது.

| | |
|---|---|
| பல்கலைக் கழகம் | 100% |
| மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் | 50% |
| வேளாண் விற்பனை குழுக்கள் | 2% |

கேட்பு தொகையான 2007.78 இலட்சம் ரூபாயில் மேற்படி நிறுவனங்களால் தணிக்கைக் கட்டணமாக ரூ.1094.39 இலட்சம் 2021-2022-ஆம் நிதியாண்டில் செலுத்தப்பட்டுள்ளது.

**தணிக்கைத் தடைகள் நீக்கம் சார்பான தொகை பிடித்தம்**

53. பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 முடியவுள்ள காலத்தில் தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்த வகையில் வசூலிக்கப்பட்ட தொகையின் விவரங்களை இணைப்பு – 1(இ)-இல் காணலாம்.

**புதிய முயற்சிகள்**

54. (i) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கென பிரத்தியேக பயிற்சிப் பிரிவு துணை இயக்குநரின் தலைமையில் செயல்படும் வகையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தணிக்கை தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு நேரடி நியமன உதவி ஆய்வர்கள் மற்றும் பணி மாறுதல் பணி நியமனம் மூலம் பதவி உயர்வு பெற்ற உதவி ஆய்வர்களுக்கு அடிப்படை பயிற்சி வழங்கப்படுகிறது. அனைத்து தணிக்கையாளர்களுக்கும் புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

(ii) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கென தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நான்கு இலக்குகள் (மென்பொருள் வடிவமைப்பு மற்றும் முன்னேற்றம், பயனர் ஏற்றுக்கொள்ளும் சோதனை, விடுபதிகை மற்றும் மென்பொருள் வெளியீடு) முடிவுற்று, தொடர் பயிற்சிகள் தணிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. பயிற்சியின் போது தணிக்கையாளர்களிடமிருந்து பின்னூட்டம் மற்றும் பரிந்துரைகள் பெறப்பட்டு, மென்பொருள் மேம்பாட்டிற்கு, மென்பொருள் தயாரிப்பாளர்களால் அத்தரவுகள் பயன்படுத்தப்படுகின்றன.

## கூட்டுறவுத் தணிக்கைத் துறை

55. சந்தானம் குழு மற்றும் நிருவாக சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளின்படி கூட்டுறவு தணிக்கை துறையானது 17.06.1981 முதல் தனி துறையாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1983 இன் 80-வது பிரிவின்படி பன்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர, 14 நிருவாக பதிவாளர்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் சட்டபூர்வ தணிக்கையை மேற்கொள்வதே இத்துறையின் முக்கியமான பணியாகும்.

56. கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்கு உட்பட்ட நிருவாகப் பதிவாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் விவரங்கள் இணைப்பு 2(அ)-இல் உள்ளன.

### கூட்டுறவுத் தணிக்கையின் நோக்கம்:

57. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை தணிக்கை செய்தல், அச்சங்கங்களின் நிதிநிலை

அறிக்கைகள் முறையாக தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்துவது கூட்டுறவு தணிக்கைத் துறையின் முதன்மைப் பணியாக உள்ளது. மேலும், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகள் 1988, சங்கங்களின் துணை விதிகள் மற்றும் அரசு வழிகாட்டுதல்களின்படி செயல்படுவதை உறுதி செய்கிறது. அரசின் மானியம், உதவித்தொகைகள் மற்றும் நிதியுதவி முறையாக பயன்படுத்தப்படுவதையும், பலன்கள் உறுப்பினர்களுக்கும் சமூகம் முழுமைக்கும் சென்றடைகின்றனவா என்பதையும் உறுதி செய்கிறது.

**நகர வங்கிகள் மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளுதல்:**

58. அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வ

தணிக்கை, பட்டயக் கணக்காளர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு தணிக்கைத் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட வங்கிகளின் உடன் நிகழ் தணிக்கைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**சட்டப் பூர்வ தணிக்கை மற்றும் தணிக்கைக் கட்டணம்**

59. தொடக்க கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பூர்வ தணிக்கை, 45 நாட்களுக்குள் முடிக்கப்படவேண்டும். தணிக்கை மேற்கொள்ளும் காலத்திற்கு தணிக்கைக் கட்டணம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்படுகிறது.

அடிப்படைவிதி 127-படி அதிக அளவிலான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களில், அதாவது தணிக்கைக்கு 45 மனித நாட்களுக்கு மேல் தேவைப்படும் நேர்வில் முழுநேர தணிக்கையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அரசாணை (நிலை) எண்.27, நிதி (கூட்டுறவுத் தணிக்கை)த் துறை, நாள் 12.02.2020-ன்படி

இத்தணிக்கைக்கு கட்டணமாக 35 சதவீத சம்பளத் தொகை சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

**தணிக்கை முன்னேற்ற நிலை**

60. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரையிலான நிதியாண்டிற்கு உரியதாகும். எனவே அந்நிதியாண்டு முடிந்த பின்னரே தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி 2020-2021-ஆம் ஆண்டிற்கான மொத்தம் உள்ள 13,564 சங்கங்களில் 8653 கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை 2021-2022-ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை விரைவில் முடிக்கப்படும். தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 இன் பிரிவு 81-ன் கீழ் விசாரணையில் உள்ளவை, வணிக குற்றப் புலனாய்வுத் துறை விசாரணையில் உள்ளவை, நீதிமன்ற வழக்கு காரணமாக கணக்குகள் கிடைக்கப் பெறாதவை போன்ற காரணங்களினால் 2019-2020-ஆம் ஆண்டுவரை சில சங்கங்களின் தணிக்கை நிறைவடையாமல் உள்ளது. இச்சங்கங்களின் தணிக்கையை முடிக்க சம்பந்தப்பட்ட

நிருவாகத்துறை அலுவலர்களின் ஒருங்கிணைப்புடன் முடிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தனியறிக்கைகள்** (Special Reports)

61. தணிக்கையில் கையாடல், மோசடி, கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் விதி மீறல், இருப்பு குறைவு ஆகிய கடுங்குறைகள் கண்டறியும் போது அனைத்து விவரங்களும் தனி அறிக்கைகள் மூலம் சம்பந்தப்பட்ட நிருவாகப் பதிவாளருக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள உடன் தெரிவிக்கப்படுகிறது. அரசாணை எண்.267, நிதி(கூட்டுறவுத் தணிக்கை)த் துறை, நாள்.06.08.2018-ன் படி தனியறிக்கைகள் மீது நிருவாக பதிவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் 2017-2018 ஆண்டுக்கு அறிக்கையாக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2018-2019ம் ஆண்டிலிருந்து நிருவாக பதிவாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கை குறித்த விவரம் எதிர் நோக்கப்பட்டுள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்கான தனியறிக்கை விவரம் பின் வருமாறு:

| தணிக்கை வருடம் | தனி அறிக்கைகள் எண்ணிக்கை | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 2017-2018 | 569 | 59.58 |
| 2018-2019 | 609 | 65.08 |
| 2019-2020 | 544 | 47.95 |
| 2020-2021 | 506 | 94.63 |
| 2021-2022 | 350 | 45.02 |

**பயிற்சி மற்றும் வளர்ச்சி**

62. தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரம் இவற்றை மேம்படுத்த பல்வேறு வகையான குறுகியகால பயிற்சிகளும், வருடந்தோறும் இரண்டு நாட்களுக்கு புத்தாக்கப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகிறது.

**தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை திட்டம்**

63. தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை என்பது கணினி மற்றும்

இணையதளத்தில் இயங்கக் கூடிய மென்பொருளாகும். இதன் மூலமாக தணிக்கை தொடர்பான தகவல்களான தணிக்கைத் திட்டம் ஒப்புதல் வழங்குதல், தணிக்கையாளர்களின் நாட்குறிப்புகள் சமர்ப்பித்தல், தணிக்கை முன்னேற்றம், தணிக்கை சான்று வழங்குதல் ஆகியவை கண்காணிக்கப்படுகின்றன. நிதிநிலை அறிக்கைகளை பதிவேற்றம் செய்தல், தணிக்கைக் கட்டணம், வசூல் விவரங்கள், தணிக்கையில் கண்டறியப்படும் கடுங்குறைகள் தொடர்பான தனி அறிக்கை விவரங்கள் ஆகியவற்றை உடனுக்குடன் தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை திட்ட மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

## 64. புதிய முயற்சிகள்

- கூட்டுறவு நிறுவனங்களின் நிதிநிலை குறித்தான தரவு தளத்தினை உருவாக்குதல்.

- கணக்குகள் வழங்காத சங்கங்கள், கணக்குகள் எழுதப்படாத சங்கங்கள், நீதிமன்றம், காவல் துறை மற்றும் விசாரணை அதிகாரியின் வசம் கணக்குகள் உள்ள சங்கங்களின் தணிக்கை

நிலுவையினை குறைக்க புதிய வழிகாட்டுதல்களை கட்டமைத்தல்.

- தணிக்கை ஆட்சேபணைகளை நிவர்த்தி செய்வதை கண்காணிக்க தொடர்புடைய மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் உள்ள நிருவாகத்துறை அலுவலர்களுடன் கூட்டாக அமர்ந்து விவாதிக்கும் புதிய நடைமுறையை உருவாக்குதல்.
- கூட்டுறவு சங்கங்களின் பரிவர்த்தனை அளவினை அடிப்படையாக கொண்டு பல்வகை சங்கங்களின் தணிக்கைக்கான தணிக்கையாளர்களின் பணி நிலையினை தெரிவு செய்தல் மற்றும் தணிக்கை சான்று வழங்குதல்.
- மற்ற மாநிலங்களுக்கு சென்று அங்கு தணிக்கையில் கடைபிடிக்கப்படும் சிறப்பு நடைமுறைகளையும் அறிந்து அவற்றை நமது மாநிலத்தில் பயன்படுத்துதல்.
- தணிக்கை கையேட்டினை திருத்துதல்.

## மாநில அரசு தணிக்கைத் துறை

65. அரசு வணிகத் திட்டங்கள் தணிக்கைத் துறை 1969-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, அரசாணை எண் 598, நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை, நாள் 03.08.1992-ன் படி நடைமுறையில் இருந்த உள்ளாட்சி நிதித் தணிக்கை மற்றும் அரசு வணிகத் திட்டங்கள் துறைகளின் பணிகள் திருத்தி அமைக்கப்பட்டு அரசுத் துறைகளிலும் உட்தணிக்கை மேற்கொள்ளும் வகையில் அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறையாக செயல்பட்டு வந்தது. பின்னர், இத்துறையின் பணி மற்றும் கடமைகள் திருத்தியமைக்கப்பட்டு தனிச் சட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட மற்றும் உருவாக்கப்படாத நிறுவனங்களின் தணிக்கை, அரசுத் துறைகளின் உட்தணிக்கை மற்றும் அரசின் நிதியுதவி பெறும் பல்வேறு அரசுத் துறை நிறுவனங்களின் தணிக்கை, வாரியங்களின் திட்ட தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருவதை கருத்திற் கொண்டு அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறையின் பெயர் 'மாநில அரசுத் தணிக்கைத் துறை' என அரசாணை எண்.264 நிதி(உள்ளாட்சி நிதி)த் துறை,

நாள்.16.08.2019-ன் வழி மாற்றம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

66. **தணிக்கையின் செயற்பரப்பு**

- தணிக்கை நிறுவனங்களின் அனைத்து வரவு மற்றும் செலவினங்களை முறையான ஆய்வு மற்றும் தணிக்கை மேற்கொள்ளுதல்.
- தணிக்கை நிறுவனங்களில் அனைத்து நிதி பரிவர்த்தனைகள் மற்றும் நிலையான ஒழுங்குமுறைகள் மற்றும் உரிய விதிமுறைகள் சரியாக பின்பற்றப்படுவது தொடர்பான கண்காணிப்புகளை உறுதிபடுத்துதல்.
- வாரிய பணியாளர்களின் ஓய்வூதியப் பயன்கள் (ம) பொது வருங்கால வைப்பு நிதி/சிறப்பு சேமநல நிதித் திட்டம் இறுதி இருப்புத் தொகைகள் ஆகியவற்றினை உறுதி செய்து தணிக்கைச் சான்று வழங்குதல்.

- வாரியங்கள் / நிறுவனங்களின் தணிக்கை தடைகளில் உள்ள கடுங்குறைபாடுகள் குறித்த அறிக்கையினை தொடர்ந்து கண்காணிக்க பொது நிறுவனங்கள் குழுவில் இறுதி தீர்மானம் நிறைவேற்றுதல்.

**தணிக்கைக்குட்பட்ட நிறுவனங்கள்**

67. மாநில அரசு தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட நிறுவனங்களின் விவரங்களை இணைப்பு – 3(அ)-இல் காணலாம்.

68. இத்துறையால் தணிக்கை செய்யப்படும் முக்கியமான நிறுவனங்கள் மற்றும் திட்டங்களின் விவரங்கள் இணைப்பு – 3(ஆ)-இல் உள்ளது.

மேற்கண்ட சட்டபூர்வ வாரியங்களின் ஆண்டுத் தணிக்கை உடனிகழ் தணிக்கையாக மேற்கொள்ளப்பட்டு, அத்தணிக்கை அறிக்கைகள், நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் வெளியிடப்படுவதுடன் அவற்றிலுள்ள பல்வேறு

கடுங்குறைபாடுகள் குறித்த விவரங்கள் அரசுக்கும் தமிழ்நாடு சட்டசபையின் பொது நிறுவனங்கள் குழுவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றன. தணிக்கை செய்யப்படும் நிறுவனங்களின் தணிக்கை நிலை விவரம் (31.03.2022 அன்றைய நிலையில்) இணைப்பு – 3(இ)-இல் உள்ளது.

**தணிக்கைச் சான்று**

69. மானியம் பெறும் நிறுவனங்களுக்கு மானியத் தகுதிச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தணிக்கைக்கு உட்பட்ட வாரியங்களில் பணியாற்றும் பணியாளர்களின் ஓய்வூதியக் கருத்துருக்கள் மற்றும் வருங்கால வைப்பு நிதி கணக்கு முடிப்புகளுக்கு தணிக்கைச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது.

**இதர பணிகள்**

70. அரசின் குறிப்பான ஆணையின்படி தற்போது 19 அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகள் இத்துறையால் மேற்பார்வை செய்யப்பட்டு

தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

1. மருத்துவக் கல்வித்துறை
2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை
3. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை
4. வேளாண்மைத் துறை
5. வேளாண்மை பொறியியல் துறை
6. புவியியல் மற்றும் சுரங்கத்துறை
7. வருவாய் நிருவாகத் துறை
8. போக்குவரத்துத்துறை
9. கல்லூரி கல்வித்துறை
10. தொழில்நுட்பக் கல்வித்துறை
11. சிறை மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை
12. காவல்துறை
13. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை
14. அகதிகள் மறுவாழ்வுத்துறை
15. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
16. வனத்துறை
17. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை
18. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை
19. தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை

**தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை**

71. தணிக்கையின் போது காணப்படும் கடுங்குறைபாடுகள் கொண்ட பத்திகளின் சுருக்கம் நடவடிக்கைக்காக அந்தந்த துறைத் தலைவர்களுக்கும் மற்றும் அரசின் துறை செயலாளரின் கவனத்திற்கும் அனுப்பி வைக்கப்படுகின்றது.

**தணிக்கைக் கட்டணம்**

72. உண்மைச் செலவினம் அல்லது சராசரி செலவுகளின் அடிப்படையில் தணிக்கை கட்டணத்திற்கான கேட்பு எழுப்பப்படுகிறது. 2021-2022 ஆண்டில் ரூ.74.65 இலட்சம் தணிக்கை கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**தணிக்கைத் தடைகள் நீக்கம் சார்பான தொகை பிடித்தம்**

73. கூட்டமர்வின் வாயிலாக, பல்வேறு தணிக்கை நிறுவனங்களின் தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட அரசுக்கு வருவாய் இழப்புகளை உருவாக்கும் இனங்களின் 6354 தணிக்கைத் தடைகள் நீக்கம் செய்யப்பட்டு ரூ.857.37 இலட்சம்

ரூபாய் வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

**திறன் மேம்படுத்துதல்**

74. இத்துறையின் தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரத்தினை மேம்படுத்த பல்வேறு தணிக்கை நிறுவனங்களின் தணிக்கை நடைமுறை குறித்து வருடந்தோறும் மூன்று நாட்களுக்கு தணிக்கையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**75. மின்ஆளுமை முயற்சிகள்**

1. இத்துறைக்கான தனி வலைமுகப்பு உருவாக்கப்பட்டு வருகிறது.
2. இத்துறையின் செயல்பாடுகளை மின்னணுமயமாக்குவதற்காக ஒரு தரவு மேலாண்மை மற்றும் பகுப்பாய்வு பிரிவு தோற்றுவிக்கப்படவுள்ளது.

### பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை


76. பால் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பூர்வ தணிக்கைப் பணியினை மேற்கொள்ள, பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை 1987-ம் ஆண்டு தனித்துறையாக உருவாக்கப்பட்டது.

77. கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை நிருவாக கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வந்த இத்துறை அரசாணை (நிலை) எண்.370, நிதி (கூட்டுறவுத் தணிக்கை)த் துறை, நாள் 22.11.2019 வாயிலாக இத்துறை அங்கீகரிக்கப்பட்ட பணிநிலைத்திறனான 333 பதவிகளைக் கொண்டு நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் தனித்துறையாக செயல்படுகிறது.

### பால் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு

78. தமிழ்நாட்டில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்று அடுக்கு அமைப்பாக, மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், மாவட்ட அளவிலான மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் (25), தொடக்க நிலையில் பால் உற்பத்தியாளர்கள்

கூட்டுறவுச் சங்கங்கள் (10335) மற்றும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் (47) செயல்பட்டு வருகின்றன.




**பால் கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் நோக்கம்**

79. பால் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை தணிக்கை செய்தல், அச்சங்கங்களின் இருப்புநிலைக் குறிப்பு மற்றும் இலாப நட்டக் கணக்குகள் முறையாக தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும்

வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்துவது பால் கூட்டுறவுத் தணிக்கைத்துறையின் முதன்மைப் பணியாக உள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், விதிகள் மற்றும் நடைமுறைகளின்படி செயல்படுவதை தணிக்கை செய்வதனால் சங்க உறுப்பினர்கள் அறிந்து கொள்ளும் வகையில் இத்துறை பொறுப்புடைமையுடன் இயங்கி வருகிறது. மேலும், அரசின் நிதியுதவி எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகவே செலவிடப்பட்டு உறுப்பினர்களும், சமுதாயமும் முழுமையாகப் பயன் அடைந்துள்ளனர் என்பதையும் உறுதி செய்கிறது.

**தணிக்கை முன்னேற்றம்**

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்**

80. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 2020-2021 தணிக்கையாண்டிற்கான இறுதித் தணிக்கை

10 அலகுகளிலும் நிறைவு பெற்று தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது.

**மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள்**

81. 2018-2019 ஆம் தணிக்கையாண்டிற்கு புதியதாக உருவாக்கப்பட்ட திருப்பூர் மற்றும் நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் தணிக்கையாண்டிற்கு புதியதாக உருவாக்கப்பட்ட நாமக்கல், திருப்பூர், தேனி, தருமபுரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய 5 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டு, தேனி மற்றும் தருமபுரி ஒன்றியங்களுக்கு தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 3 ஒன்றியங்களில் தணிக்கை அறிக்கை இறுதியாக்கம் செய்யும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

2020-2021 ஆம் தணிக்கையாண்டிற்கு 21 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் தணிக்கை முடிக்கப்பட்டு 20 ஒன்றியங்களுக் தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. தேனி ஒன்றியத்தில் தணிக்கை அறிக்கை இறுதியாக்கம் செய்யும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. எஞ்சியுள்ள தருமபுரி, நாமக்கல், திருப்பூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 4 ஒன்றியங்களில் கணக்குகள் முழுமையாக தணிக்கைக்கு வழங்கப்படாததால் தணிக்கைப்பணி தொடங்கப்படவில்லை.

**தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்**

82. 2020-2021-ஆம் ஆண்டில் மொத்தமுள்ள 10382 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 8881 சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பட்டு 4255 சங்கங்களுக்கு தணிக்கைச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள சங்கங்களுக்கு தணிக்கைச் சான்று வழங்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

கடந்த 3 ஆண்டுகளின் தணிக்கைப்பணி முன்னேற்ற விவரம் இணைப்பு – 4(அ)-இல் உள்ளது.

**தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படைவிதிக் கட்டணம்**

83. 2021-2022-ஆம் நிதியாண்டில் உடன்நிகழ் தணிக்கைக் கட்டணமாக ரூ.107.08 இலட்சமும், அடிப்படைவிதி கட்டணமாக ரூ. 178.35 இலட்சமும் பால் கூட்டுறவு சங்கங்களிலிருந்து வசூலிக்கப்பட்டு மொத்தம் ரூ.285.43 இலட்சம் அரசுக்கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

**தனியறிக்கை**

84. தணிக்கையில் காணப்படும் கடுங்குறைகள் மற்றும் நிதி சார்ந்த அனைத்து விவரங்களும் தனியறிக்கைகள் மூலம் இயக்குநர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை மற்றும் பால் வளத்துறை துணைப்பதிவாளர்களுக்கு உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.

**கடந்த 3 ஆண்டுகளில் தனியறிக்கைகளின் முன்னேற்ற விவரங்கள்:-**

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்**

2020-2021-ஆம் ஆண்டிற்கு ரூ. 8828.25 இலட்சத்திற்கு 9 தனியறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்**

| **தணிக்கையாண்டு** | **தனியறிக்கைகளின் எண்ணிக்கை** | **தொகை** (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2017-2018 | 10 | 618.20 |
| 2018-2019 | 20 | 8300.68 |
| 2019-2020 | 20 | 10028.12 |
| **மொத்தம்** | **50** | **18947.00** |

2020-2021-ஆம் ஆண்டிற்கு ரூ.7740.55 இலட்சத்திற்கு 20 தனியறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் (31.03.2022 வரை)**

| தணிக்கையாண்டு | தனியறிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2017-2018 | 280 | 898.60 |
| 2018-2019 | 361 | 674.10 |
| 2019-2020 | 698 | 292.82 |
| 2020-2021 | 73 | 3.17 |
| **மொத்தம்** | 1412 | 1868.69 |

**பயிற்சி மற்றும் மேம்பாடு**

85. பால் கூட்டுறவு தணிக்கைத்துறையின் தணிக்கையாளர்களுக்கு, துறை சார்ந்த அறிவு மற்றும் திறனை மேம்படுத்துவதற்காக அரசின் நிதியுதவியுடன் ஒவ்வொரு ஆண்டும் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

**துறையின் புதிய முயற்சிகள்**

86. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை சிறப்பாக செயல்படும் பொருட்டு பணிநிலைத்திறன் மறுசீரமைப்பு, பணியிடங்களுக்கு சிறப்பு

விதிகள் ஏற்படுத்துதல், தணிக்கைக் கட்டணத்தை திருத்தியமைத்தல் மற்றும் தணிக்கையாளர்களின் பயன்பாட்டிற்கு தணிக்கை கையேடு தயாரித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை**

87. அரசாணை (நிலை) எண்.181, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 25.11.2021-ன்படி இந்து சமயஅறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்த தணிக்கைப் பிரிவு பிரிக்கப்பட்டு, **இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை** என தனித்துறை ஒன்று உருவாக்கப்பட்டு நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது .

கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு சமய நிறுவனங்கள் அவற்றின் ஆண்டு வருமானத்திற்கு ஏற்ப வகைப்படுத்தப்பட்டு, தணிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. ஆண்டு வருமானம் ரூ.1,000/- மற்றும் அதற்கு மேல் உள்ள சமய நிறுவனங்களின் பொதுக் கணக்குகள்
2. அன்னதானம்
3. ஒரு கால பூஜை
4. கல்வி நிறுவனங்கள்
5. திருப்பணி
6. கிராமப்புற திருப்பணி
7. ஏனைய பலவகை கணக்குகள்

88. **தணிக்கையின் நோக்கம்**

- 1959-ஆம் ஆண்டு இந்து சமயம் மற்றும் அறக்கட்டளைகள் சட்டப் பிரிவு 87(2) மற்றும் 116 (2) (xiv)-ல் ஏற்படுத்தப்பட்ட கணக்கு தணிக்கை முறை விதிகளின் படி பேணப்படவேண்டிய கணக்குகளில் ஏதேனும் விதி மீறல்கள் உள்ளதா என்பது தணிக்கையில் சரிபார்க்கப்படுகிறது.

- தணிக்கையில் பின்வரும் சரிபார்ப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:

    (i) முதலீடுகள், பத்திரங்கள் மற்றும் அச்சிடப்பட்ட கட்டணச் சீட்டுக்கள் நேரில் சரிபார்த்தல்.

    (ii) சரியான நேரத்தில் வருவாய் பெறுதல்

    (iii) நிலுவைத் தொகைகளை வசூலிக்க எடுக்கப்படும் நடவடிக்கை.

    (iv) அனைத்து வசூல்களும் கணக்கில் கொண்டுவரப்பட்டுள்ளனவா என சரிபார்த்தல்.

    (v) அனைத்து செலவினங்களுக்கும் உரிய செலவுச் சீட்டுக்கள் உள்ளனவா என சரிபார்த்தல்.

(vi) முதல் நோக்கில் தேவையற்றதாகவும் அதிகப்படியாகவும் உள்ள செலவினங்கள்.

89. 31.03.2022 அன்றுள்ளவாறு தணிக்கையின் நிலை இணைப்பு-5(அ)-இல் உள்ளது.

**தணிக்கை கட்டணம்:-**

90. 1959-ஆம் ஆண்டு, இந்து சமய மற்றும் அறக்கட்டளைகள் சட்டப்பிரிவின்-92ன் துணைப் பிரிவு 2-ன் படி, தணிக்கை செய்தவகையில் ஏற்பட்ட செலவுத் தொகைகளை ஈடு செய்யும் பொருட்டு தணிக்கைக் கட்டணங்கள் ஒவ்வொரு பசலி ஆண்டிலும் சமய நிறுவனங்களின் உதவித் தொகை நிர்ணய வருமானத்தில் பின்வரும் சதவீதத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு வசூலிக்கப்படுகிறது.

| வ. எண் | சமய நிறுவனங்களின் மதிப்பிடக்கூடிய வருமானம் | தணிக்கைக் கட்டணத்தின் சதவீதம் |
|---|---|---|
| 1 | ரூ.5000 வரை | இல்லை |
| 2 | ரூ.5001-5,00,000 | 1.5 சதவீதம் |
| 3 | ரூ.5,00,001க்கு மேல் | 4 சதவீதம் |

மேலே குறிப்பிட்டபடி தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்படும் தொகை இந்து சமய அறநிலையத்துறையின் நிருவாகப் பிரிவினால் வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்படுகிறது.

## கருவூலக் கணக்குத் துறை

### 91. முகவுரை

கருவூலங்கள் அரசாங்கத்தின் பழமையான செயல்பாட்டு அலகுகளில் ஒன்றாகும். முதலில் அவை ஆட்சியர் அலுவலகங்களின் ஒரு பகுதியாக செயல்பட்டன. 01.04.1962-இல் அவை தனித் துறையாக மறுசீரமைக்கப்பட்டு நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.

கருவூலக் கணக்குத் துறையானது, கருவூலக் கணக்கு ஆணையரை துறைத் தலைவராகக் கொண்டு நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் 6 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், 6 சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 3 சார்-சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 37 மாவட்டக் கருவூலங்கள், 1 ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், 1 உதவி முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் 243 சார் கருவூலங்களுடன் கருவூலம் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றன. கருவூல கணக்குத் துறை அரசின் நிதி தொடர்பான பல்வேறு கருவூல செயல்பாடுகளை

செய்கிறது. மேலும், நிதி தொடர்பான செயல்பாடுகளை செய்வதற்காக பல்வேறு துறைகள், வாரியங்கள் மற்றும் பெருநிறுவனங்களுக்கு தேர்ந்த மனிதவளத்தை வழங்குகிறது.

**92. முதன்மைப் பணிகள்**

1) அரசின் அனைத்து வரவு செலவுகளை கையாளுதல்
2) 9.3 இலட்சத்திற்கும் மேலான பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குதல்
3) 7.2 இலட்சத்திற்கும் மேலான ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கல்
4) அரசின் திட்டம் மற்றும் மூலதன பணிகளுக்கான பட்டியல்களுக்கு பணம் வழங்குதல் 5) மாதாந்திர கணக்குகளை மாநிலக் கணக்காயருக்கு அனுப்புதல்
5) விற்பனையாளர்களுக்கு நீதி / நீதிசாரா முத்திரைத்தாள்கள் விற்பனை செய்வது.
6) பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தை அமுல்படுத்துதல்.
7) பணம் பெறும் அலுவலர்களின் தன் வைப்பு கணக்குகளையும், தலநிதிக்கான பல்வேறு வைப்பு கணக்குகளையும் பராமரித்தல்,

அனைத்து துறை அலுவலர்களுக்கு முன்பணம் நிதி ஒதுக்கீடு வழங்குதல் (உதாரணமாக வாகன முன்பணம், கணினி முன்பணம் மற்றும் இதர)

## 93. ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் (IFHRMS)

- அரசுப் பணிகள் திறம்பட மற்றும் செவ்வனே நடைபெற நிதி மற்றும் மனிதவள மேலாண்மையை ஒருமைப்படுத்தி ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் அரசால் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக திருவாளர் அக்சென்சர் சர்வீஸஸ் (பி) லிமிடெட் நியமிக்கப்பட்டு, ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளரை தேர்வு செய்தல் ஆகிய பொறுப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

- இத்திட்டத்தினை செயல்படுத்த திட்ட ஒருங்கிணைப்பாளராக திருவாளர் விப்ரோ நிறுவனம் தேர்வு செய்யப்பட்டது.

- இத்திட்டத்திற்கு தேவையான கணினி கட்டமைப்பு அனைத்து கருவூல அலுவலகங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- இத்திட்டம், முதற்கட்டமாக கரூர் மாவட்டத்தில் ஜனவரி 2020-ல் துவக்கப்பட்டு படிப்படியாக அனைத்து மாவட்டக் கருவூலங்களிலும் மற்றும் சம்பளக் கணக்கு அலுவலகங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. சம்பளம் மற்றும் இதர பட்டியல்கள் அனைத்தும் IFHRMS மூலமாக பெறப்பட்டு ரிசர்வ் வங்கியின் (RBI) இ-குபேர் (e-kuber portal) வழியாக பயனாளர்களின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது.

- ஓய்வூதியம் பெறும் அனைத்து ஓய்வூதியர்களுக்கும் IFHRMS இன் வாயிலாக, அனைத்து மாவட்ட கருவூலகங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மூலம்

பட்டியல் தயார் செய்து ஓய்வூதியம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது.

- கருவூலத்தில் பெறப்படும் அரசின் வருவாய் இனங்களை மின் செலுத்துச்சீட்டு (e-Challan) மூலமாக பொதுமக்கள் / அரசு துறை நிறுவனங்கள் / உள்ளாட்சி அமைப்புகள் போன்றவை அரசிற்கு செலுத்த வேண்டிய வரவினங்களை, மின்னணு வரவுகளாக (e-Receipt) 24 மணிநேரமும் தங்குதடையின்றி இணையத்தின் மூலம் (www.karuvoolam.tn.gov.in) செலுத்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சேவைகளுக்காக பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் பரோடா வங்கி ஆகிய நான்கு வங்கிகள் திரட்டல் வங்கிகளாக (Aggregator Banks) தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வங்கிகளின் வாயிலாக அரசின்

வருவாய்கள் பெறப்பட்டு, அரசின் ரிசர்வ் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

- கருவூலத்தில் பெறப்படும் அரசின் வருவாய் இனங்களை மின்னணு வரவாக (e-challan) மின் செலுத்துச்சீட்டு மூலமாக பெறுவதற்கான நடைமுறை அரசின் வருவாய் ஈட்டும் முக்கிய துறைகளான வணிகவரித்துறை மற்றும் மதுவிலக்கு & கலால் துறைகளிலும் போக்குவரத்துத் துறையில் e-சாரதியும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- ஒப்பளிப்பு செய்யும் நபர்களின் தனித்துவ அடையாளப்படுத்துதல் மின்னணு கையொப்ப / சான்றிதழ் (DSC) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- போக்குவரத்துத் துறையின் e-வாகன் பதிவுத்துறையுடன் ஒருங்கிணைப்பு விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

மேலும், இவ்வாண்டில் பின்வரும் கூறுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் செயல்படுத்துவதற்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

- TANGEDCO மற்றும் BSNL ஒருங்கிணைத்தல்.

- துறைகளில் மின் பணிப் பதிவேடுகளை செழுமைப்படுத்துதல் .

- தமிழக அரசின் வாடகை குடியிருப்பு திட்டத்தில், குடியிருப்பு வாடகை வசூலை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் (TNHB) உடன் ஒருங்கிணைத்தல்.

- வருமான வரி அறிக்கை தாக்கல் (24Q, 24G மற்றும் 26Q) பணம் பெற்று வழங்கும் அலுவலர்களால் தாக்கல் செய்யப்பட வேண்டிய காலமுறை வருமானக் கணக்கு அறிக்கை (24Q, 24G மற்றும் 26Q) தயாரிப்பது தொடர்பான மென்பொருள் உருவாக்கப்பட்டு சோதனை ஓட்டம் நிறைவடைந்துள்ளது. வருமான வரி

துறையால் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப மென்பொருளில் திருத்தங்கள் மேற்கொள்ளும் பணிகள் நடைபெற்று வருகிறது.

- மாநில கணக்காயர் கணக்குகள் & உரிமைகள் மூலம் மேற்கொள்ளப்படும் கருவூலம் சாரா பரிவர்த்தனைகளை ஒருங்கிணைத்தல்.

## பொது நிதி மேலாண்மை திட்டம்

94. பொது நிதி மேலாண்மை திட்டத்தின் வாயிலாக, ஒன்றிய அரசின் நிதியுதவி பெறும் நலத்திட்டங்கள் மற்றும் ஒன்றிய-மாநில அரசின் பங்களிப்புடைய நலத்திட்டங்களின் நிதி நிலையினைக் கண்காணித்தல், கணக்குகளை ஒத்திசைவு செய்து அறிக்கை வெளியிடுதல் முதலானவற்றை மேம்படுத்த இயலும். இத்திட்டத்தை செயல்படுத்துவதில் கருவூலக் கணக்குத் துறை ஒருங்கிணைப்புத் துறையாக உள்ளது.

மேலும் மேம்பட்ட நிருவாக வசதிக்காகவும் மற்றும் அரசின் நலத்திட்டங்கள் பயனாளிகளுக்கு நேரடியாக சென்று சேரவும், ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு மாநில அரசின் ஆணைகள் மற்றும் வழிகாட்டுதலின் அடிப்படையில் பொது நிதி மேலாண்மை திட்டத்தினை ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்த கருவூலம் மற்றும் கணக்குத் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கருவூலம், பொது நிதி மேலாண்மை திட்டத்துடன் வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்டு, இதுவரை இத்திட்டத்தின் கீழ் 51 அரசுத் துறைகளில் 185 ஒன்றிய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. பொது நிதி மேலாண்மை திட்டம் நடைமுறைப்படுத்த 124 ஒற்றை ஒருங்கிணைப்பு முகமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் - 2021

95. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்கள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் தமிழ்நாடு சட்டப்பேரவையில் இயற்றப்பட்ட சட்டங்களின் கீழ் ஏற்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள், மாநில அரசு நிறுவனங்கள் (விரும்புவன மட்டும்) ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தகுதியுடைய அவர்தம் குடும்ப உறுப்பினர்களின் மருத்துவ சிகிச்சைக்காக தொகுப்பாண்டில் ஐந்து இலட்சம் ரூபாய் மருத்துவ உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் காப்பீட்டு கட்டணமாக அரசு ஊழியரிடமிருந்து ரூ.300/- (ரூ.295/- காப்பீட்டு சந்தா + ரூ.5/- அரிய நோய்கள் மற்றும் எதிர்பாரா சூழ்நிலைகளில் ஏற்படும் கூடுதல் செலவுகளுக்காக நிதிய மூலதனம்: இதன் மூலம் மருத்துவ உதவி ரூ.20.00 லட்சம் வரை மருத்துவ உதவி பெறலாம்) வீதம் அவர்களது மாதாந்திர ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. புதிய மருத்துவக் காப்பீட்டு திட்டம் 30.06.2021 க்கு பிறகு மேலும் நான்காண்டுகளுக்கு சில சிறப்பு

அம்சங்களுடன் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்புதிய மருத்துவக் காப்பீடு திட்டம் - 2021, பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மூலம் 01.07.2021 முதல் செயல்படுத்தப்படுகிறது.

96. இப்புதிய திட்டத்தில், கீழ்க்காணும் நோய்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற நிதி உச்சவரம்பு 10.00 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

1) புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் புற்றுநோய்க் கட்டிகளுக்கான நோய்த் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகள்
2) கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை
3) சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை
4) விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் பல்வகைப்பட்ட எலும்பு முறிவு

5) இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, அன்யூரிசிம்ஸ் மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி
6) தீயினால் ஏற்பட்ட காயங்களுக்கான சிகிச்சை
7) உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக நன்கொடையாளரின் உறுப்பு பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் சிகிச்சைக்கான செலவுகள்

கோவிட்-19 நோய் தொற்றிற்கான சிகிச்சையை குறிப்பிட்ட சிகிச்சைகளின் பட்டியலில் சேர்த்து ரூ.10.00 லட்சம் வரை காசில்லா சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்களைச் சார்ந்து வாழும் மகன்கள் மற்றும் மகள்கள் அவர்களது வயது வரம்பினைக் கருத்தில் கொள்ளாமல் இத்திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்று பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

97. இத்திட்டத்தின் கீழ் விபத்தினால் ஏற்படும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்கைகளுக்கு அங்கீகரிக்கப்படாத (Non-Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள

வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் 203 சிகிச்சைகள் அதாவது 116 வகையான சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் மற்றும் 87 மருத்துவ கவனிப்பு நடைமுறைகள் மேற்கொள்வதற்கு, தமிழ்நாடு, புதுச்சேரி, திருவனந்தபுரம், பெங்களூரு மற்றும் புதுதில்லி ஆகிய இடங்களில் உள்ள 1169 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில், கட்டணமில்லா மருத்துவ சிகிச்சைகள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 01.07.2016 முதல் 30.06.2021 வரை. 2,48,716 பயனாளிகள் 1033.46 கோடி ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர். மேலும், புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2021 –ன் கீழ் 01-07-2021 முதல் 31.03.2022 வரை 51,767 பயனாளிகள் 215.14 கோடி ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

மேலும், தற்போது கோவிட்-19 க்கான சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளில் மேற்கொள்ள 5.00 கோடி ரூபாய் நிதிய மூலதனம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது.

இதுநாள் வரை 75 கோடி ரூபாய் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2018**

98. குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2014, 01.07.2014 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1.7.2018 முதல் 30.06.2022 முடிய, நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிக்கப்பட்டுள்ளது. பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இப்புதிய திட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சைகள் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றை பெற உச்சவரம்பு 2 இலட்சம் ரூபாயிலிருந்து 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டம், ஓய்வூதியதாரர்களைச் சார்ந்துள்ள மகன் / திருமணமாகாத மகள் மனநலம் குன்றியவராக அல்லது மனநலமற்றவராக அல்லது மாற்றுத்திறனாளியாக இருந்து மற்றும்

பொருளீட்ட இயலாதவராக இருந்தால், சில நிபந்தனைகளுக்குட்பட்டு, நீட்டிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டத்தில் கீழ்க்காணும் மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றைப் பெற உச்சவரம்பு 7.50 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

1) புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் புற்றுநோய்க் கட்டிகளுக்கான நோய் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகள்
2) கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை
3) சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை
4) விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் எலும்பு முறிவுகள்
5) இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, அன்யூரிசம் (Aneurysms) மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி (Angioplasties)
6) தீக்காயங்களுக்கான சிகிச்சை.

Covid-19 நோய் தொற்றிற்கான சிகிச்சையை குறிப்பிட்ட சிகிச்சைகளின் பட்டியலில் சேர்ந்து ரூ.7,50,000 (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம்) வரை பணச்செலவின்றி சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டத்தில், திடீரென்று எதிர்பாராத விதமாக, அவசர சிகிச்சை தேவைப்படுகின்ற மற்றும் விபத்தை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்படாத (Non-Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 114 வகையான சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள் பணச் செலவின்றி மேற்கொள்வதற்குத் தமிழ்நாடு, புதுச்சேரி, திருவனந்தபுரம், புதுதில்லி மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களில் உள்ள 1168 அங்கீகரிக்கப்பட்ட (Approved) மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 01.07.2018 முதல் 30.06.2022 வரையிலான

நான்காண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் காப்பீட்டு கட்டணமாக ஒரு ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரருக்கு 3,800 ரூபாய் வீதம் யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திற்கு சேவை வரிகளுடன் அரசு ஆரம்பத்தில் செலுத்தும். இதற்கென ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து ஒவ்வொரு மாதமும் 350 ரூபாய் வீதம் அவர்களது மாதாந்திர ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியத்திலிருந்து 2018, ஜூலை மாதம் முதல் பிடித்தம் செய்யப்படுகிறது.

01.07.2014 முதல் 30.06.2018 வரையிலான நான்காண்டுகளில் 2,01,285 பயனாளிகள் 578.01 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர். இத்திட்டம் நீட்டிக்கப்பட்டு 01.07.2018 முதல் 31.03.2022 வரை 2,23,004 பயனாளிகள் 881.56 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவச் சிகிச்சை பெற்றுள்ளனர். புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2018-இன் கீழ் 01-07-2021 முதல் 31.03.2022 வரை 49,582 பயனாளிகள் 207.02 கோடி ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

மேலும், உள்ளாட்சி அமைப்புகள், அரசு நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் அரசு பல்கலைக் கழகங்கள், விருப்பமுள்ள மாநில அரசு அமைப்புகள் / நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிந்து அந்தந்த நிறுவனங்களிடமிருந்து ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, அந்தந்த நிறுவனங்களே நிறுவனங்களின் பங்களிப்புத் தொகையினை மாநில அரசின் நிதியுதவியை எதிர்கொள்ளாமல் செலுத்த இயலும் பட்சத்தில், அவர்களும் இத்திட்டத்தில் இணைந்துகொள்ள அரசினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது கோவிட்-19க்கான சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளில் மேற்கொள்ள ரூ.2.50 கோடி நிதிய மூலதனம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. இதுநாள் வரை ரூ.37.50 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## சிறுசேமிப்புத் துறை

99. சிறுசேமிப்புத் திட்டங்கள் அஞ்சலகங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் திரட்டப்படும் சிறுசேமிப்பு முதலீடுகளின் நிகர வசூலினை அந்த மாநிலத்திற்கே நீண்ட கால கடனாக ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது. இத்தகைய கடன்களின் அதிக வட்டி விகிதம் காரணமாக, தமிழக அரசின் கோரிக்கையை ஏற்றும், சிறுசேமிப்புக் கடன் பெறுவதிலிருந்து மாநிலத்திற்கு 2016-2017 ஆம் ஆண்டு முதல் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### சிறுசேமிப்புத் திட்டங்கள்

100. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரின் தேவைகளுக்கு ஏற்றவகையில், பலவிதமான சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதத்தினை ஒவ்வொரு காலாண்டிற்கும் மாற்றியமைத்து ஒன்றிய அரசு அறிவிப்பினை வெளியிடுகிறது.

தற்போது 01.01.2022 முதல் நடைமுறையில் உள்ள சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதங்கள்

சிறுசேமிப்புத் துறையின் இணையதளமான (www.tnsmallsavings.org)-இல் வெளியிடப்பட்டு அவ்வப்போது மாற்றங்களும் வெளியிடப்படுகின்றன.

**சிறுசேமிப்பு வசூல் விவரங்கள்**

101. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021-2022 ஆம் ஆண்டில் சிறுசேமிப்பு நிகர வசூல் கணிசமாக அதிகரித்துள்ளது.

**முகவரமைப்பு**

102. தமிழ்நாட்டில் சிறுசேமிப்புத் தொகையை திரட்டுவதற்காக, மாநிலம் முழுவதும் தற்போது 13,375 சிறுசேமிப்பு முகவர்கள் (மகளிர் முகவர் - 10,429 மற்றும் நிலை முகவர் - 2,946) உள்ளனர். தொற்றுநோயின் காரணமாக முந்தைய ஆண்டை ஒப்பிடும் போது முகவர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு குறைந்துள்ளது

**வெகுமதிகள்**

103. சிறுசேமிப்புத் திட்டங்களின் கீழ் முகவர்கள் மூலமாக திரட்டப்படும் முதலீடுகளுக்கு ஒன்றிய அரசு முகவர்களுக்கு தரகுத்தொகை

வழங்குகிறது. சிறுசேமிப்பு முகவர்களை ஊக்குவிக்கும் வகையில் சிறுசேமிப்பில் சிறந்து விளங்கும் மகளிர் (MPKBY) முகவர்களுக்கு ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலும், நிலை முகவர்களுக்கு (SAS) மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசு ரொக்கப் பரிசுகள் மற்றும் கேடயங்களை வழங்கி வருகின்றது.

104. தமிழகமெங்கும் சிக்கனம் மற்றும் சிறுசேமிப்புத் திட்டங்களில் சேமித்தல் ஆகிய இரண்டு பழக்கங்களை ஊக்கப்படுத்துவதிலும், சிறுசேமிப்பு முதலீட்டாளர்கள் மற்றும் முகவர்களின் குறைகளை, இணையதளம் (www.tnsmallsavings.org) மூலமாக களைவதிலும், சிறுசேமிப்புத்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் உலக சிக்கன நாள் விழாவின் போதும், மாணாக்கர்களிடையே சிறுசேமிப்பு தொடர்பான கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, நடனப் போட்டி மற்றும் நாடகப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றது.

**விளம்பரம்**

105. சிறுசேமிப்புத் துறை, சென்னை மற்றும் மாவட்டங்களில் நடத்தப்படும் அரசு பொருட்காட்சிகளில் கலந்து கொண்டு, சிறுசேமிப்பு அரங்கு அமைத்தும், பொது மக்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கியும் மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவில் நாடகங்களை நடத்தியும் விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றது.

## தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம்

106. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம் 2012-இன் கீழ் புதிய உட்கட்டமைப்புத் திட்டங்களைக் கண்டறிதல், கருத்துருவாக்கல், முன்னுரிமை அளித்தல், செயல்படுத்துதல் போன்ற பணிகளை அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்த சட்டரீதியான வழிவகைகளை உருவாக்குகிறது. மேலும், உட்கட்டமைப்பு திட்டங்களுக்கான திட்ட தயாரிப்பு, கட்டமைப்பு, நிதியுதவி, செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்கான உகந்த சூழலை ஏற்படுத்துவதற்கான அமைப்புசார் வழிவகைகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு உட்கட்டமைப்பு விதிகள் 2012 இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நிதிகளை நிருவகிக்கவும், அதிலிருந்து திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கவும் வழிமுறைகளை உருவாக்குகிறது. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரிய ஒழுங்கு முறைகள் 2013-இன் கீழ் வாரியம் செயல்படுவதற்கான நடைமுறைகள் மற்றும் திட்ட

ஆவணங்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான வழிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

107. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம் 2012 இன் கீழ் தோற்றுவிக்கப்பட்ட இவ்வாரியம் தமிழ் நாட்டில் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக தோற்றுவிக்கப்பட்ட முன்னோடி முகைமையாகும். மேலும் இவ்வாரியமானது மாநிலத்தில் உட்கட்டமைப்பு வளர்ச்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதுடன், பொதுத்துறைகள் வாயிலாகவும் மற்றும் பொது தனியார் பங்களிப்பு முறையின் வாயிலாகவும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வகை செய்கிறது.

108. இவ்வாரியத்தின் தலைவராக மாண்புமிகு முதலமைச்சரும் (அலுவல்வழி) மற்றும் துணைத் தலைவராக மாண்புமிகு நிதி அமைச்சரும் (அலுவல்வழி) இருப்பர். மேலும் இவ்வாரியத்தில் தலைமைச் செயலர் தலைமையில் நிருவாகக் குழுவும், நிதித்துறை செயலர் தலைமையில் துணைக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளன.

109. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம் 2012-இன் கீழ் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியானது திட்டங்களின் வடிவமைப்பு, மேம்பாடு, செயல்பாடு, நிருவாகம், மேலாண்மை ஆகியவற்றை எளிதாக்க நிதி உதவி அளிக்கிறது. திட்ட தயாரிப்பு நிதியானது ஆய்வுகள் நடத்துதல், நிபுணர்கள், மற்றும் ஆலோசகர்களின் சேவைகளை அமர்த்துவது, சாத்தியக்கூறு ஆய்வுகள், விரிவான திட்ட ஆய்வுகள், திறன் மேம்பாடு, ஆராய்ச்சி போன்ற நோக்கங்களுக்கு நிதி உதவி அளிக்கிறது.

110. மாநிலத்தில் உட்கட்டமைப்பு மேம்பாட்டில் தனியார் துறையின் பங்களிப்பை ஊக்குவிக்கவும், எளிதாக்கவும், திறந்த சந்தையில் இருந்து வல்லுநர்களை பணியமர்த்துதல், வாரியத்தின் நடைமுறைகளை எளிதாக்குதல், அதிகாரப் பகிர்வை மேம்படுத்துதல் மற்றும் இது தொடர்பான சட்ட திருத்தங்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் வாரியத்தை மேலும் வலுப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

111. இதுவரை தலைமைச் செயலகத்தில் இயங்கிவந்த இவ்வாரியம், தற்போது தேவையான அலுவலர்கள் மற்றும் வல்லுநர்களோடு தனி அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும் தனியார் பங்களிப்புடன் திட்டங்கள் செயல்படுத்தப்படக் கூடிய வாய்ப்புகள் அதிகமுள்ள முக்கிய துறைகளுக்கு உதவி செய்வதற்காக வாரியத்தின் மூலமாக வல்லுநர்களை பணியமர்த்த முடிவு செய்துள்ளது. இந்த வல்லுநர்கள் பொருத்தமான திட்டங்களைக் கண்டறிதல், ஆலோசகர்களை பணியமர்த்தல், ஆவணத்தயாரிப்பில் உதவி செய்தல், மற்றும் வாரியத்தின் ஒப்புதல்களை விரைவாகப் பெறுவதற்கு ஒருங்கிணைத்தல் போன்ற பணிகளில் துறைகளுக்கு உதவி புரிவார்கள்.

112. மேலும், அரசு தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தை பலப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் நேரத்தில், மறுபுறம் உட்கட்டமைப்புக்கான நிதியாதாரங்களை தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC), மூலமாக திரட்டுகிறது.

TNIDB உட்கட்டமைப்பு திட்டங்களை ஊக்குவிக்கும் மற்றும் மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும். TNIFMC மூலம் உட்கட்டமைப்பு திட்டங்களுக்கான புதுமையான நிதியாதாரங்களை முதலீட்டாளர்களுக்கு தக்க வருமானத்தை உறுதி செய்யும் வகையில் திரட்ட முயற்சிக்கும். இவ்விரு அமைப்புகளும் இணைந்து பணியாற்றுவதை அரசு உறுதி செய்யும்.

113. இங்கிலாந்து அரசின் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படக் கூடிய உட்கட்டமைப்பு திட்டங்களை வகைப்படுத்துதல், தர நிலைப்படுத்துதல் மற்றும் முன்னுரிமைப்படுத்தும் நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்ப உதவியினை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் தமிழ்நாடு அரசின் ஒட்டுமொத்த வளர்ச்சி நோக்கத்திற்கு ஏற்ப திட்டங்களை தேர்ந்தெடுப்பதற்கான வடிவமைப்பை உருவாக்குவது மற்றும் அரசு-தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படக் கூடிய சிறப்பான திட்டங்களுக்கான பட்டியலை உருவாக்குவது ஆகும். இத்திட்டம் இங்கிலாந்து அரசின்

காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு அலுவலகத்தின் ஆய்வு மற்றும் சான்று இயக்குநரகத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும். இங்கிலாந்து அரசின் துணைத் தூதரகம் இத்திட்டத்திற்காக வல்லுநர்களை அமர்த்தியுள்ளது. மேலும், இதன் ஒருங்கிணைப்பு பணி தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தால் மேற்கொள்ளப்படும்.

114. சென்னை மாநகரம் தொடர்ந்து நிலைக்கத்தக்க வளர்ச்சி பெறுவதை உறுதி செய்வதற்கு சென்னை மாநகரக் கூட்டாண்மை என்னும் தனித்தன்மை வாய்ந்த வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டம் உலக வங்கி மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் கடனுதவியுடன் நீடித்து நிலைக்கத்தக்க சேவைகளை சென்னை பெருநகர மக்களுக்கு வழங்குவதை உறுதி செய்ய பல்துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் "இறுதி விளைவு சார்ந்த திட்டம்" (Program for Results) ஒரு புத்தாக்க திட்டமாக வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் 430 மில்லியன் டாலர் மதிப்பீட்டில், உலக

வங்கியின் நிதி உதவி 150 மில்லியன் டாலர், ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதி உதவி 150 மில்லியன் டாலர் மற்றும் தமிழ்நாடு அரசின் இணைநிதி 130 மில்லியன் டாலர் செயல்படுத்தப்படவுள்ளது. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் திட்ட கண்காணிப்பு முகமையாக ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு பணியினை மேற்கொள்கிறது.

115. சென்னை மாநகர கூட்டாண்மை திட்டத்தின் இரண்டாம் கட்டமான நகர்புற போக்குவரத்து மற்றும் இடம்சார் வளர்ச்சி என்ற திட்டத்தினை செயல்படுத்திட உலக வங்கி மற்றும் தமிழக அரசின் பல்வேறு துறைகளுக்கிடையே ஆரம்பக்கட்ட கலந்தாய்வு கூட்டங்கள் நடைபெற்று வருகிறது.

## தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம்(TNIFMC)

116. தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC) என்கிற சொத்து மேலாண்மை நிறுவனத்தில் 49 சதவிகித பங்குகள் தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியமும் 51 சதவிகித பங்குகள் நிதி நிறுவனங்களும் வைத்துள்ளன. மேலும், இந்நிறுவனம், தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதியம் (Tamil Nadu Infrastructure Fund), தமிழ்நாடு உறைவிட நிதியம்-அடுக்கு II (Tamil Nadu Shelter Fund-Tier II) மற்றும் தமிழ்நாடு வளர்ந்து வரும் துறைகளுக்கான தொடக்க நிதியம் (Tamil Nadu Emerging Sector Seed Fund) ஆகிய மூன்று விதமான நிதிகளை மேலாண்மை செய்து வருகிறது. தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC) தற்போது வாங்கும் திறனுக்கேற்ற வீடுகள் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் தொழில் நகரிய குடியிருப்புகள் வீடுகள் மற்றும் பணிபுரியும் பெண்கள் தங்கும் விடுதிகள் அமைப்பதற்கு ரூ.375 கோடி முதலீடு செய்ய

வாய்ப்புடைய திட்டங்களை மதிப்பீடு செய்து வருகிறது.

### தமிழ்நாடு வளர்ந்து வரும் துறைகளுக்கான தொடக்க நிதியம்

117. புத்தொழில் மற்றும் வளர்ந்து வரும் துறையில் உள்ள பிற நிறுவனங்களில் முதலீடு செய்வதற்காக தமிழ்நாடு வளர்ந்து வரும் துறைகளுக்கான தொடக்க நிதியத்தினை (Tamil Nadu Emerging Sector Seed Fund) அரசு நிறுவியுள்ளது. ரூ.500 கோடி அளவிலான தொகுப்பு நிதியத்திற்கு முதலீடுகளைத் திரட்டுவதற்கு இந்திய பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) ஒப்புதலைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட் மற்றும் டைடெல் பார்க் லிமிடெட் ஆகியவை முறையே ரூ.30 கோடி மற்றும் ரூ.20 கோடி அளிக்க உறுதி அளித்துள்ளன. மேலும், மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் அவர்கள் 2022-2023-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கையில், புத்தொழில் நிறுவனங்கள் தழைத்தோங்குவதற்கான சூழலை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு சார்ந்த

புத்தொழில் நிறுவனங்களில் பங்கு முதலீடுகளை மேற்கொள்ள தமிழ்நாடு வளர்ந்து வரும் துறைகளுக்கான தொடக்க நிதியத்திற்கு (TNESSF) அரசு ரூ.50 கோடி வழங்கும் என அறிவித்துள்ளார். அரசின் இந்த முன்முயற்சிகள், திறன் வாய்ந்த மனிதவளத்தை உருவாக்கும் வகையிலும் புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும் அமையும். இந்நிதியம் வளர்ந்து வரும் துறைகளின் முன்னேற்றத்திற்கு உகந்த சூழலை உருவாக்க பெரிதும் உறுதுணையாக இருக்கும்.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**
நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்
துறை அமைச்சர்

# இணைப்புகள்

## இணைப்பு – 1

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை


**1(அ). உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட நிறுவனங்கள்**

| வ. எண் | நிறுவனங்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 21 |
| 2 | நகராட்சிகள் | 115 |
| 3 | பேரூராட்சிகள் | 528 |
| 4 | மாவட்ட ஊராட்சிகள் | 31 |
| 5 | ஊராட்சி ஒன்றியங்கள் | 388 |
| 6 | பல்கலைக் கழகங்கள் | 23 |
| 7 | நூலக ஆணைக்குழுக்கள் | 32 |
| 8 | வேளாண்மை விற்பனைக் குழுக்கள் | 25 |
| 9 | தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம் | 1 |
| 10 | வேளாண் விற்பனைக் குழு பொறியியல் பிரிவு | 3 |
| 11 | கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி | 1 |
| 12 | சாத்தன்காடு விற்பனை குழு | 1 |
| 13 | உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் புதுநகர் வளர்ச்சிக் குழுமங்கள் | 29 |
| 14 | கிராம ஊராட்சிகள் (ஆண்டுதோறும் சுழற்சி 22% முறையில்) மொத்த கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை – 12524 | 2831 |
| 15 | பல்வகை நிறுவனங்கள் | 12 |
| 16 | தேசிய சமூக நலத் திட்டம் | 32 |
| | **மொத்தம்** | **4073** |

**1(ஆ). உடன்நிகழ் தணிக்கை செயல்படுத்தப்படுகின்ற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள்**

| வ. எண் | மாநகராட்சிகள் (உடன்நிகழ் தணிக்கை) | நகராட்சிகள் (உடன்நிகழ் தணிக்கை) |
|---|---|---|
| 1. | சென்னை | புதுக்கோட்டை |
| 2. | சேலம் | பழனி |
| 3. | கோயம்புத்தூர் | பொள்ளாச்சி |
| 4. | திருச்சிராப்பள்ளி | உதகமண்டலம் |
| 5. | மதுரை | மறைமலைநகர் |
| 6. | திருநெல்வேலி | பல்லாவரம் |
| 7. | தூத்துக்குடி | திருவண்ணாமலை |
| 8. | வேலூர் | கொடைக்கானல் |
| 9. | திருப்பூர் | இராஜபாளையம் |
| 10. | ஈரோடு | கோவில்பட்டி |
| 11. | தஞ்சாவூர் | |
| 12. | திண்டுக்கல் | |
| 13. | ஆவடி | |
| 14. | நாகர்கோவில் | |
| 15. | காஞ்சிபுரம் | |
| 16. | கடலூர் | |
| 17. | கரூர் | |
| 18. | கும்பகோணம் | |
| 19. | தாம்பரம் | |

## 1(இ). தணிக்கைத் தடைகளின் மீதான ரொக்கம் வசூல் செய்த விவரம் ஏப்ரல்–2021 முதல் மார்ச்–2022



## இணைப்பு – 2

## கூட்டுறவுத் தணிக்கைத் துறை

**2(அ). நிருவாகப் பதிவாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்கு உட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் விவரம்**

| வ. எண். | நிருவாகப் பதிவாளர்களின் விவரம் | கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 2020-2021 |
|---|---|---|
| 1. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 8453 |
| 2. | கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் | 1357 |
| 3. | தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர் | 303 |
| 4. | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் | 208 |
| 5. | தலைமைச் செயல் அலுவலர், பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் | 702 |
| 6. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) | 720 |
| 7. | மீன் வளத் துறை இயக்குநர் | 1381 |
| 8. | கால்நடைப் பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவப்பணிகள் ஆணையர் | 110 |
| 9. | சர்க்கரைத் துறை ஆணையர் | 17 |
| 10. | வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) | 1 |
| 11. | வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர். | 113 |
| 12. | பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் | 25 |
| 13. | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை இயக்குநர் | 125 |
| 14. | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை இயக்குநர் | 49 |
| | **மொத்தம்** | **13564** |

# இணைப்பு – 3

## மாநில அரசுத் தணிக்கைத் துறை

**3(அ). மாநில அரசுத் தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட நிறுவனங்களின் விவரம்**

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சட்டப்பூர்வ வாரியங்கள் | 06 |
| 2. | நீதித்துறை கட்டுப்பாட்டிற்குட்பட்டவை | 06 |
| 3. | வேளாண்மைத் துறை (அனைத்து மாவட்டங்களில் உள்ள முதன்மை கிடங்குகள் மற்றும் துணை கிடங்குகள், விதைப் பண்ணைகள் போன்றவை) | 1120 |
| 4. | அரசு நிறுவனங்கள் (தமிழ்நாடு திரைப்பட பிரிவு, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தணிக்கை போன்றவை) | 1141 |
| 5. | அரசு உதவி பெறும் நிறுவனங்கள் (உலக தமிழாராய்ச்சி நிறுவனம், பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் போன்றவை) | 643 |
| 6. | ஆதி திராவிட பழங்குடியினர் கல்வி உதவித் தொகை தணிக்கை | 2770 |
| 7. | எடையளவு நிறுவனங்கள் (அனைத்து மாவட்டங்களிலுள்ள முத்திரை ஆய்வாளர் மற்றும் முத்திரை உதவி ஆய்வாளர் அலுவலகங்கள்) | 340 |
| 8. | அரசு உதவி பெறும் தொழில்நுட்ப பயிலகங்கள்/பொறியியல் கல்லூரிகள் | 37 |
| 9. | புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத் தணிக்கை (பள்ளி செல்லும்/ பள்ளி செல்லா மையங்கள்) | 97198 |
| **மொத்தம்** | | **103261** |

3(ஆ). மாநில அரசுத் தணிக்கைத் துறையால் தணிக்கை செய்யப்படும் முக்கியமான நிறுவனங்கள் / திட்டங்களின் விவரம்.

1. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
2. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்
3. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
4. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்
5. கதர் கிராம தொழில் வாரியம்
6. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு (சமூக பாதுகாப்பு) திட்டம்
7. நாட்டுப்புற கலைஞர் நல வாரியம்
8. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்
9. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம்
10. 15 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள்
11. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி உதவித்தொகைத் திட்டம்
12. அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி
13. மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுகள்
14. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்
15. ஆசிரியர் தேர்வு வாரியம்
16. நிகர்நிலை பல்கலைக்கழகங்களின் நாட்டு நலப் பணித் திட்டம்
17. தமிழ்நாடு அரசு மருத்துவ உதவித் திட்டம்
18. குடும்ப பாதுகாப்பு நல நிதி
19. மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி
20. அரசு உதவி பெறும் தொழில்நுட்ப பயிலகங்கள் (ம) பொறியியல் கல்லூரிகள்
21. அனைத்து அரசு துறைகளின் ஊதிய நிர்ணயத் தணிக்கை (வணிக வரித் துறை/பதிவுத் துறை (ம) போக்குவரத்து துறையின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது)
22. பாராளுமன்ற/சட்டமன்ற தேர்தல் செலவின தொகை

## 3(இ). தணிக்கை நிலை விவரம் (31.03.2022 அன்றைய நிலையில்)

| வ. எண் | தணிக்கை நிறுவனங்களின் பெயர் | தணிக்கை முடிக்கப்பட்ட ஆண்டு | தணிக்கை நடப்பில் உள்ள ஆண்டு | பத்திகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 2020-2021 | 2021-2022 | 467 | 264932.12 |
| 2. | தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் | 2020-2021* | 2021-2022 | 578 | 76074.84 |
| 3. | சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் | 2020-2021 | 2021-2022 | 546 | 86401.20 |
| 4. | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | 2018-2019<br>2019-2020 | 2020-2021 | 1020 | 35236.39 |
| 5. | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 2017-2018<br>2018-2019<br>2019-2020**<br>2020-2021 } | - | 1787 | 27427.36 |
| 6. | தமிழ்நாடு வக்ஃபு வாரியம் | 2020-2021 | - | 1640 | 4107.85 |
| 7. | நிருவாக பேராட்சியர் | 2017-2018 | 2018-2019 முதல் 2020-2021 வரை | 938 | 424.76 |
| 8. | பொறுப்பு சொத்தாட்சியர் | 2018-2019 | 2019-2020 முதல் 2020-2021 வரை | 1702 | 6243.85 |
| 9. | நொடித்தோர் சொத்தாட்சியர் | 2018-2019 | 2019-2020 முதல் 2020-2021 வரை | 1319 | 3220.67 |
| 10. | சட்டப்பூர்வ | 2015-2016 (II) | 2016-2017 | 2171 | 133528.89 |

| வ. எண் | தணிக்கை நிறுவனங்களின் பெயர் | தணிக்கை முடிக்கப்பட்ட ஆண்டு | தணிக்கை நடப்பில் உள்ள ஆண்டு | பத்திகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| | கலைப்பாளர் | | முதல் 2020-2021 வரை | | |
| 11. | எடையளவு நிறுவனங்கள் | 2020-2021 | 2021-2022 | 14368 | 29815.75 |
| 12. | அரசு நிறுவனங்கள் | 2020-2021 | 2021-2022 | 76564 | 157353.29 |
| 13. | அரசு உதவி பெறும் நிறுவனங்கள் | 2020-2021 | 2021-2022 | 19089 | 307659.66 |
| 14. | அரசு உதவி பெறும் தொழில்நுட்ப பயிலகங்கள் மற்றும் பொறியியல் கல்லூரிகள் | 2019-2020 | 2020-2021 | 5865 | 12721.93 |
| 15. | புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 2017-2018 முதல் 2020-2021 வரை | - | 193867 | 57090.82 |
| 16. | வேளாண்மைத் துறை | 2019-2020 | 2020-2021 | 30634 | 23042.67 |

* 2020-2021 ஆண்டு கணக்குகள் பெறப்படவில்லை. வரவு செலவினத் தணிக்கை முடிக்கப்பட்டுவிட்டது.

** 2019-2020, 2020-2021 ஆண்டு கணக்குகள் பெறப்படவில்லை. வரவு செலவினத் தணிக்கை முடிக்கப்பட்டுவிட்டது.

## இணைப்பு – 4

## பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை

**4(அ). கடந்த 3 ஆண்டுகளின் தணிக்கைப்பணி முன்னேற்ற விவரம் :**

| வ. எண். | தணிக்கை ஆண்டு | மொத்தமுள்ள சங்கங்கள் | தணிக்கை முடிக்கப்பட்டவை | தணிக்கைச் சான்று வழங்கப்பட்டவை | தணிக்கை நிலுவை |
|---|---|---|---|---|---|
| 1 | 2018-2019 | 9857 | 9825 | 9819 | 32 ( 29 கணக்குகள் எழுதப்பட -வில்லை) |
| 2 | 2019-2020 | 10081 | 9860 | 9757 | 221 (177 சங்கங்களில் கணக்குகள் எழுதப்பட -வில்லை) |
| 3 | 2020-2021 | 10382 | 8881 | 4255 | 1501 (1348 சங்கங்களில் கணக்குகள் எழுதப்பட -வில்லை) |

## இணைப்பு – 5

## இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை

### 5(அ). 31.03.2022 அன்றுள்ளவாறு தணிக்கையின் நிலை

| வ. எண் | சமய நிறுவனத்தின் வகைகள் | தரம் | நிறுவனங்களின் எண்ணிக்கை | 31/03/2022 நிலுவையில் உள்ள பசலிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | சிறப்பு 1 | இணை ஆணையர் / செயல் அலுவலர் | 11 | 5 |
| 2 | சிறப்பு 2 | துணை ஆணையர் / செயல் அலுவலர் | 9 | 0 |
| 3 | சிறப்பு 3 | உதவி ஆணையர் / செயல் அலுவலர் | 27 | 3 |
| 4 | வகை 1 | ரூ. 5 இலட்சத்திற்கு மேல் | 709 | 287 |
| 5 | வகை 2 | ரூ. 2-5 இலட்சம் | 662 | 351 |
| 6 | வகை 3 | ரூ.60000-200000 | 1030 | 1782 |
| 7 | வகை 4 | ரூ.10000-60000 | 2378 | 12767 |
| 8 | வகை 5 | பட்டியலில் சேர்க்கப்படாத கோவில்கள் | 6282 | 50650 |
| 9 | ஒருகால பூஜை | | 12959 | 40210 |
| 10 | திருப்பணி கணக்குகள் | | | 659 |
| 11 | கிராமப்புற திருப்பணி கணக்குகள் | | | 10 |
| 12 | கல்வி நிறுவன கணக்குகள் | | 25 | 13 |
| 13 | பலவகை கணக்குகள் | | 13 | 24 |
| 14 | அன்னதானம் | | 754 | 8 |

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.